கீதாசார்யன்



மேலட்டையில் திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி) நம்மாழ்வார்

கீதாசார்யன் 8

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



“कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।”

தொகுதி 1 | ஸித்தார்த்தி௵ | வைகாசி மீ | மே 79 | பகுதி 8



ஆசிரியர்

M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.

P. T. சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்

7, தெற்கு மாட வீதி,
திருவல்லிக்கேணி : சென்னை-600005.

ஆண்டுச் சந்தா ரூ. 8

விலை 75 காசு

ஸ்ரீமத் பகவத் கீதை

யுதாமந்யுச்ச விக்ராந்த உத்தமௌஜாச்ச வீர்யவாந்
ஸௌபத்ரோ த்ரௌபதேயாச்ச ஸர்வ ஏவ மஹாரதா : (6)

யுதாமன்யுவும், பராக்ரமமுடைய உத்தமௌஜா எனுமரசனும், சுபத்திரையின் பிள்ளையான, வீரியமுடைய அபிமன்யுவும், துரௌபதியின் பிள்ளைகளான ஐந்து இளம் பாண்டவர்களும் ஆகிய இவர்கள் அனைவரும் மஹாரதர்கள்.

அஸ்மாகந்து விசிஷ்டா யேதாந்நிபோத த்விஜோத்தம,
நாயகா: மமஸைந்யஸ்ய ஸம்ஜ்ஞார்த்தம் தாந் ப்ரவீமி தே (7)

அந்தணர் தலைவரான துரோணரே! எனது சேனையின் நாயகர்களாக உள்ளவர்களை நீர் நன்கு அறிந்து கொள்வதற்காகக் கூறுகிறேன். கேளும்.

பவாந் பீஷ்மச்ச கர்ணச்ச க்ருபச்ச ஸமிதிஞ்சய :
அச்வத்தாமா விகர்ணச்ச ஸௌமதத்திஸ் ததைவச (8)

துரோணாசாரியாரான தேவரீரும், பீஷ்மரும், கர்ணனும், கிருபரும், போரில் வெற்றி பெறும (உம்முடைய பிள்ளையான) அச்வத்தாமனும் விகர்ணனும், ஸோமதத்தனின் பிள்ளைகளும் (இருக்கின்றனர்).

அந்யேச பஹவ : சூரா : மதர்த்தே த்யக்தஜீவிதா :
நாநாசஸத்ர ப்ரஹரணா : ஸர்வே யுத்த விசாரதா : 9)

மற்றும் பல சூரர்களும் எனக்காக உயிரையே தியாகம் செய்தவர்களும் பலபல அஸ்த்ரங்களையும் ஆயுதங்களையும் உடையவர்களும் போரில் வல்லவர்களுமான பலர் உள்ளனர்.

Edited and Published by M. A. Venkata Krishnan and Prin.ed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.

பட்டரும் இலக்கணமும்

சகல சாஸ்திரங்களையும் வேதங்களையும் கரை கண்டவரும் மிகக் கூர்மையான அறிவுள்ளவரும், எந்த வாதத்தையும் கண்ணிமைக்கும் நேரத்தில் சமாளிக்கக் கூடியவருமான பட்டரிடம் மிகுந்த பற்றுள்ளவரான தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்தார். அவருக்கு பட்டரிடம் இருந்த பற்றுதலைவிட தமிழிடம் ஒரு மாத்திரை அதிகப் பற்று இருந்தது. இதைப் பட்டரும் அறிந்திருந்தார். தமிழ்ப் புலவருக்கு பட்டரிடம் பரிபூர்ணமான குரு பக்தி இருந்தாலும், தமிழ் ப்ரபந்தங்களை பட்டர் உபந்யாஸம் செய்யும்போது சமஸ்கிருதத்தை அதிகமாகக் கலந்து மணிப்ரவாள பாஷையில் விளக்குவது மட்டும் புலவருக்குச் சிறிது கசப்பாக இருந்தது.

புலவருக்கு இருந்த தமிழ்ப் பற்றில் பட்டரைத் தவிர வேறு யாராவது இப்படிப் பிரசங்கம் செய்திருந்தால் ஒன்று சண்டைக்குச் சென்றிருப்பார், அல்லது பிரசங்கத்திற்குப் போவதை நிறுத்தி இருப்பார். ஆனால் பட்டர் உபந்யாச

சாண்டில்யன்

ரசத்தால் அதில் மூழ்கி அதிலிருந்து விலக முடியாமல் இருந்தார் புலவர்.

புலவருடைய நண்பர்கள் இதைக் கண்டு அடைந்த வியப்பு கொஞ்ச நஞ்சமல்ல. 'க' கர ஒற்று ச' கர ஒற்று பேச்சில் தவறினால் கூட புலவர் கொதித்து எழுவதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். "அதைக் கண்டேன்" என்பதை 'அதை கண்டேன்' என்று எழுதிவிட்டால் கூட புலவர்

உடனடியாக சண்டைக்கு வந்துவிடுவார் என்ற பயம் அவர்களுக்கு இருந்து வந்தது. இலக்கியத்தில் பெரும் புலமை வாய்ந்த புலவருக்கு இலக்கணத்திலும் தீவிர பற்று இருந்தமையால் அவர் எங்கும் தவறுகண்டிக்கும் பழக்கத்தை தமிழுக்குத் தாம் செய்ய வேண்டிய தலையாய கடமையாக நினைத்திருந்தார்.

அந்தப் புலவரிடம் பட்டருக்கும் அதிகப் பிரேமை இருந்தது. அந்தப் பிரேமையின் காரணமாக புலவரை பட்டர் 'பிள்ளை' என்று அன்பாக அழைப்பார். பிள்ளையும் பட்டரை 'ஜீயா, ஜீயா' என்று மிகச் சொந்தமாக அழைத்து வந்தார்.

இப்படிப் பரஸ்பரம் பிரீதியுள்ள இந்த இருவரும் அநேகமாக விவாதிப்பது காலக்ஷேப சமயங்களில் தான். ஒரு நாள் பட்டர் திருவாய்மொழியின் இரண்டாம் பத்தின் ஐந்தாவது பகுதிக்கு மகோன்னதமாக அர்த்தம் சொல்லிக் கொண்டிருந்தார். மடைதிறந்த ஏரி போல் கனவேகத்துடன் பட்டர் திருவாக்கிலிருந்து பிரவகித்த பிரசங்க அம்ருதத்தை ஏராளமான பாகவதர்கள் பருகி, தேன் குடித்த வண்டுகளைப் போல் மயங்கிக் கிடந்தார்கள். புலவர் நிலைமையும் அப்படித் தான் இருந்தது. ஆனால் புலவரை அப்படி ஒரேடியாக ஆழ்த்திவிட முடியுமா ? அந்தத் திருவாய்மொழியின் பத்தாம் பாட்டை விவரிக்க பட்டர் ஆரம்பித்ததும் புலவர் துள்ளி எழுந்தார்.

'ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியும் அல்லன்' என்ற பாசுரத்திற்கு வியாக்கினம் சொல்ல முற்பட்டார் பட்டர். இந்த சமயத்தில் தமிழ்ப் புலவர் இடை புகுந்தார். "மன்னிக்க வேண்டும்" என்று வாயைப் பொத்திக் கொண்டு எழுந்து நின்றார். சபையிலிருந்தவர்கள் புலவரைக் கொலைப் பார்வையாகப் பார்த்தார்கள். "உட்கார், உட்கார்" என்று சிலர் அடக்க முற்பட்டனர்.

பட்டர் அவர்களைக் கையமர்த்தி, புலவரை நோக்கி புன் முறுவலுடன் "என்ன பிள்ளை?" என்றும் கேட்டார். அனு தாபத்துடன் புலவர் மனத்தில் ஓடுவது என்ன வென்பதை முகக் குறிப்பினாலேயே உணர்ந்து கொண்டிருந்தார் பட்டர்.

புலவர் யாரையும் இலட்சியம் செய்யாமல் "ஜீயா! பாட்டு சரியாயில்லை" என்று விக்ஞாபித்தார்.

"ஆழ்வார் பாட்டா?" என்று வினவினார் பட்டர்.

"ஆம்" புலவர் பதிலில் மேலுக்கு அடக்கமும் உள்ளே மிடுக்கும் இருந்தது.

"ஆழ்வாரிடமே தப்பு கண்டு பிடிக்கிறீரே?" என்று மேலும் குத்தினார் பட்டர்.

"நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்ற நக்கீரன் பரம்பரையில் வந்தவன் நான்" என்று புலவர் தமது பரம்பரையைத் தெரியப் படுத்தினார்.

"உமது சந்தேகத்தைக் கேளும்" என்றார் பட்டர், புலவ ரின் அறியாமையை நினைத்து பரம கருணையுடன்.

"பாட்டு 'ஆணல்லன், பெண்ணல்லன், அல்லாவலியுமல் லன் என்று இருக்கிறது."

"ஆமாம்"

"ஆண், பெண், அலி ஆகிய மூன்றைத்தான் உலகில் பார்க்கிறோம்."

"அதனாலென்ன?"

புலவர் முகத்தில் வெற்றிக்குறி தாண்டவமாடியது. "நாம் நிதர்சனமாகப் பார்க்கிற ஆண், பெண், அலி மூன்றுமே இல்லை யானால் இந்தப் பாட்டில் சொல்லப்படும் பரம்பொருள் சூன் யமா?" என்று வினவினார் புலவர்.

சபையில் நிசப்தம் நிலவியது. பட்டர் முகத்தை எல்லோ ரும் ஆவலோடு பார்த்தார்கள். தமிழன் கேட்டதும் ஓரளவு சரியாகத்தான் தெரிந்தது அவர்களுக்கு. இந்தச் சிக்கலை பட் டர் எவ்வாறு நிர்வாகம் பண்ணப் போகிறார் என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பட்டர் தமது கருணைக் கண்களைத் தமிழன் மீது காட்டி, "பிள்ளை, உமது இயல் அறிவுக்கு ஆழ்வார் பாட்டு சரிப்பட்டு வரவில்லையோ?" என்று கேட்டார்.

"இல்லை, ஜீயா" புலவர் பதில் திட்டமாக இருந்தது.

"பிள்ளை! பாட்டு ஆணல்லன், பெண் அல்லள் அல்லா அலியும் அல்லது என்று பால் பாகுபாட்டில் பிரியவில்லையே?"

"இல்லை"

"பிள்ளை! மூன்று சொற்களிலும் அல்லன், அல்லன் என்று இருப்பதனால் இவ்வுலகில் காணும் ஆண், பெண், அலி என்ற மூன்றின்படியும் அல்லன் என்பதும், அந்த பரமாத்மா இவற் றிற்கெல்லாம் அப்பாற்பட்ட புருஷோத்தமன் என்பதும் தொனிக்கவில்லையா?" இதைக் கேட்ட பட்டர் குரலில் பக்திப் பிரவாகம் இருந்தது. ஆழ்வார் பாட்டை எண்ணி அகம் குழைந்து பரவசத்தால் கண்களை மூடினார் பட்டர்.

தமிழ்ப் புலவர் பட்டரின் தமிழ் அறிவின் ஆழத்தைக் கண்டு வாயடைத்து நின்றார். பிறகு நெடுஞ்சாண் கட்டையாக பட்டர் திருவடிகளில் விழுந்தார். "ஜீயா! அறிவிலேன், அறி விலேன் இயற்றமிழை மறந்து இலக்கணத்தைக் கட்டிக்

கொண்டு திண்டாடினேன். இதனல் ஆழ்வார் மனத்தையும், தமிழையும் அறிய ஆற்றலற்றவன் ஆனேன்'' என்று கண்ணீர் மல்கினர் புலவர்.

"பிள்ளை! எழுந்திரு. ஆழ்வாரை இப்பொழுதாவது புரிந்து கொண்டு அனுபவ சித்தி பெற்றுயே. இதுவே உன் பாக்கியம். ஆழ்வார் தமிழிலும் உயர்ந்த தமிழ் ஏது? அவர் பாட்டில் தொனிக்கும் பொருளைவிடச் சிறந்த பொருள் எது? அவர் திருவாய் மலர்ந்தருளிய பொருள் உயர்வற உயர்நல முள்ள ஒரே பொருளாகிய பரம்பொருளைப் பற்றியல்லவா?'' என்று அனுக்கிரஹித்து "காணலுமாகான்'' என்ற மேல்வரிக் குப் போனர். பட்டர் வாயிலிருந்து உதிர்ந்த தமிழ் அமு தத்தை புலவர் பருகி மெய்மறந்தார். ★

மேலக்கோட்டை திருநாராயணபுரம் யது கிரி யதிராஜ ஜீயர்மடத்தை அலங்கரித்தருளா நின்ற ஸ்ரீமத் பரமஹம்ஸ யதுகிரி யதிராஜ நாராயண ஜீயர் ஸ்வாமி 10—5—79 அன்று திருநாடலங்கரித்தார். இது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கே பேரிழப்பாகும்.

பெருமாள் கோயில் தென்னுசார்ய தர்சன துரந்தரராக எழுந்தருளி யிருந்த ஸ்ரீ. உ. வே. நல்லப்பா ஜீயப்பங்கார் ஸ்வாமி 4—5—79 அன்று திருநாடலங்கரித்தார். ஈடு செய்ய முடி யாத இந்த இழப்பால் வாடும் தென்னுசார்ய ஸம்ப்ரதாயஸ்தர் களுக்கு நமது ஆழ்ந்த அநு தாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

கீதாசார்யன் பதில்கள்

ப. சுந்தரவல்லி அம்பத்தூர்.

கே : வேதாந்த தேசிகரும் மணவாளமாமுனிகளும் சம காலத்தவர்களா ?

ப : இல்லை. வேதாந்த தேசிகர் பரமபதித்த வருடத்திற்கு அடுத்த வருடம் மணவாள மாமுனிகள் அவதரித்தார். வேதாந்த தேசிகர் காலம் கி. பி. 1268—1369. மணவாள மாமுனிகள் காலம் கி. பி. 1370—1444.

S. திருநாராயணன் பொழிச்சலூர்.

கே : பகவத் கீதையை குருமூலம் கற்றுக் கொண்டபின் தான் பாராயணம் செய்ய வேண்டுமா, அல்லது நாமே பாராயணம் செய்யலாமா ?

ப : பாராயணமாக பகவத் கீதையை வாசிப்பதனால் குரு மூலம் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. எழுத்துப் பிழை போன்ற தவறுகள் இல்லாமல் பாராயணம் செய்யக் கூடிய திறன் உடையவர் எவரும் பகவத்கீதையைப் பாராயணம் செய்யலாம். ஆனால் பகவத் கீதையின் பொருளை அறிந்து கொள்வதற்கும், கீதா பாஷ்யம் போன்ற வியாக்யானங்களை வாசிப்பதற்கும் குருவிடம் பயிலுவது அவசியம்

தேவு மற்றறியேன்

திருக்குறுங்குடி நம்பி அர்ச்சாஸமாதியைக் கடந்து யதீந்த்ரான எம்பெருமானாரிடம் சிஷ்யனாயிருந்து வைஷ்ணவ நம்பியானமையை சென்ற இதழில் அநுபவித்தோம். செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாரான நம்பெருமாள் யதீந்த்ரப்ரவணரான மணவாள மாமுனிகளிடம் சிஷ்யனாயிருந்து வீறுபெற்றமையை இனி அநுபவிப்போம்.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுன மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

என்கிறபடியே எம்பெருமானே நமது குருபரம்பரையில் முதலாசார்யன். குருபரம்பரை (ஆசார்யர்களின்) தனியன் ஸேவிக்கும் அடைவில் "நம: ஸ்ரீரங்கநாயக்யை" என்று

Dr. V.V. ராமானுஜம்

பிராட்டியையும் "ஸ்ரீஸ்தனாபரணம் தேஜ: ஸ்ரீரங்கேசயமாச்ரயே" என்று எம்பெருமானையும் வணங்குவதால் இத்தனியனில் சொல்லப்பட்ட ஆசாரியர்கள் ஸ்ரீரங்க நாச்சியாரும் ஸ்ரீரங்கநாதனுமே என்பது புலனாகும்.

இப்படி ப்ரதமாசார்யனான நம்பெருமாள், "நமக்கு ஒரு ஆசார்யன் இல்லையே; நாமும் ஆசார்யவானாக (ஆசார்ய ஸம்பந்தமுள்ளவனாக) இருக்கவேண்டும்" என்ற ஆசையுடன் ஒரு ஸதாசார்யன் திருவடி பணியவேணும் என்ற ஆவலுடன் இருந்தபோது, யதீந்த்ரப்ரவணரான மாமுனிகளைவிட ஆசார்யத்வ பூர்த்தியுள்ளவர் யாருமில்லை என்று கண்டு,

யதிராஜருடைய மறு அவதார பூதரான இவருடைய சிஷ்யனாக ஆகிப் பெருமையுற வேண்டுமெனத் தீர்மானித்தார். மேலும் மாமுனிகளின் மஹிமையை உலகோருக்கு ப்ரகாசப்படுத்த வேணும் என்பதும் பெருமானின் அவா.

நம்பெருமாள்—நம்மாழ்வார்—நம்பிள்ளை என்கிறபடியே நம்பெருமாளுக்கு மிகவும் உகந்த ஆழ்வாரான குருகூர்ச் சடகோபனும் நம்மாழ்வார் அருளிச் செய்த தமிழ்மறையான (தமிழாரணம்) திருவாய் மொழியின் செம்பொருளை நம்பிள்ளை விளக்கியது ஈடு முப்பத்தாறுயிரப்படியில். மாமுனிகளுக்கு முப்பத்தாறுயிரப் பெருக்கர் என்றே ப்ரஸித்தி. இவர் வந்து திருவாய் மொழியின் ஆழ்ந்த பொருள்களை உலகமறியச் செய்யாவிடின், பல வியாக்யானங்கள் இருந்தும் அது கடலோசைக்கொப்பாகவே இருந்திருக்கும் என்பதை கந்தாடை அண்ணன்;

> யாவருமுய்ய மணவாளயோகி தயாளுவென்னப்
> பூமகள் மண்மகள் புண்ணியமாக இந்தப் பூதலத்தே
> தாம் அவதாரம் செயாதிருந்தால் சடகோபர் திரு
> வாய்மொழியோடு கடலோசையோடு வாசியுண்டோ?

என்று வெளியிட்டார். இப்படிப்பட்ட ஞானபூர்த்தியுடன் விளங்கிய மாமுனிகளை ஒரு சமயம் அரங்கன் அருளப்பாடிட்டு திருவாய் மொழியை அதற்கவதரித்திருந்த ஐந்து வியாக்யானங்களுடன் தானும் நாச்சிமார்களும் மற்ற பரிகரங்களும் இருந்து கேட்கும்படி விளக்கும்படி நியமித்தார். ஸ்வாமியும் ஓராண்டு காலம் தேனும் பாலும் கன்னலும் அமுதுமொக்க திருவாய்மொழியின் ஸகலார்த்தங்களையும் இனிதே அருளிச் செய்ய,

> அருளினதே முதலாக அரங்கருக்கும்
> அன்று முதல் அருந்தமிழை அமைத்துக்கொண்டு
> தெருளுடைய வியாக்கியை ஐந்துடனே கூட்டித்

திகழ் திருமா மணிமண்டபத்தில் வந்து
புன்சிரிப்பும் பாவனையும் மகிழ்வும் கொள்ள
அருளுடைய சடகோபர் உரைத்த வேத
மது கேட்டு—

என்கிற இளையாழ்வார் பிள்ளை வாக்கின்படி, ஓராண்டு காலம் தன் திருவிழாக்களையெல்லாம் நிறுத்திவிட்டுத் திருமாமணி மண்டபத்தில் திவ்ய ஸிம்ஹாஸனத்திலிருந்து

வான்திகழும்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரம்

ஆன திருவாய்மொழியின் ஆழ்ந்த பொருள்களை மாமுனிகளின் அமுதமென்ன திருவாக்காக ஆரப் பருகினன்.

இப்படி ஓராண்டு காலக்ஷேபம் நடத்தி மறு வருடம் ஆனித் திருமூலத்தன்று சாற்றுமுறையாகும் ஸமயத்தில் பெருமாள் ஐந்து வயதுள்ள அர்ச்சக குமாரரிடம் ஆவேசித்து

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

என்ற மாமுனிகள் விஷயமான தனியனை அருளிச் செய்து,

தேசமெங்கும் இது திருப்பதிகள் தோறுரைக்க
நேசமுற அரங்கர் நேமித்தார்

என்கிறபடியே எல்லா திவ்விய தேசங்களிலும் இந்த தனியன் அநுஸந்திக்கப்பட வேணும் என்று திருமுகப் பட்டயமும் விட்டருளினார். இந்த தனியன் தாடெங்கும் பரவ,

பட்டர்பிரான் முதலாய பதின்மர்கலைப் பழிச்சலிலும்
சிட்டர்களாய்த் தினந்தோறும் திருமணிடு வேளையிலும்
இட்டமுற உணும்போது ஒண்கரநீர் ஏற்கையினும்
அட்டதிக்கும் விளங்குரைத்தார் ஆரியர்கள் அனைவருமே

என்கிறபடியே, அருளிச்செயல் அநுஸந்தானத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும், திருமண் அணியும் போதும், உண்ணும்

போது பரிஷேசன ஆசமனம் பண்ணும் போதும் இன்னும் பல சமயங்களிலும் இந்தத் தனியனைப் பெரியோர் சொல்லி மகிழ் வாராயினர்.

"தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார் பேசியிருப்பன கள் பேர்க்கவும் பேராவே" என்ற ஆண்டாள் திருவாக்கின் படி அவனே அருளிய இந்தத்தனியனின் சொல் நயமும் பொருள் நயமும் சொல்லித் தலைக்கட்ட இயலாது. ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் என்கிறபடி தன் ஆசார்யனுடைய பெருமையை மெய்யே அருளிச் செய்தான் அரங்கன். இதில் வெகு முக்யமானது,

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் — யதீந்த்ரப்ரவணம் — வந்தே என்பதே. தன் ஆசார்யனான ஸ்ரீசைலேசரின் க்ருபையால் யதி ராஜனுடைய அருளுக்கு இலக்கான மாமுனிகளை வணங்கு கிறேன் என்றபடி. மாமுனிகளுடைய ஆசார்யப்ராவண் யத்தையிட்டே அவர் பெருமையைப் பேசியுள்ளான் அரங்கன்.

இப்படி நிகரற்ற ஆசார்யருக்கு ஒப்பற்ற ஒரு தனியனை அருளிச்செய்து அது எங்கும் நடக்கும்படி திவ்யாஜ்ஞை பிறப் பித்ததுமின்றி, நம் பெருமாள் பண்ணிய இதர சம்மானங்கள் :

தமக்கு திவ்யம்ஸிம்மாஸனமான நாகபர்யங்கத்தை ஆசார்யனுக்கு இருப்பாக ஸமர்ப்பித்தான். இதனால் ஸகல திவ்யதேசங்களிலும் மணவாள மாமுனிகள் சேஷ ஆஸனத் தில் ஸேவை ஸாதிக்கிறார். மேலும், "ஆசார்யனுடைய தீர்த்த தினத்தை (விண்ணுடு எய்திய நாளை) சிஷ்யன் பரிபா லிக்கக் கடவன்" என்ற ஸதநுஷ்டானத்தை இன்றும் இவர் விஷயத்தில் அநுஷ்டித்து வருகிறான். அன்றைய தினம் நம் பெருமாள் அடைக்காய் (வெற்றிலை பாக்கு) கண்டருளுவ தில்லை என்பதும் (மாசி மீ க்ருஷ்ணத்வாதசி இவர் தீர்த்ததின மாகும்) வேறு எந்த ஆழ்வார் ஆசார்யருடைய தீர்த்ததினமும் எந்த திவ்ய தேசத்திலும் அநுஷ்டிக்கப்படுவதில்லை என்பதும் அறியத் தக்கது. (தொடரும்)

நம்மாழ்வாரும் நாதமுனியும்

A. S. வெங்கடவரதாச்சாரி, B. Sc., B. Ed.

திருநாவீறுடைய பிரான் என்பது ஸ்வாமி நம்மாழ்வாரின் திருநாமங்களிலே ஒன்று. அவர் வாக்வன்மை நானிலம் அறிந்த விஷயம். அது நான்கு திவ்ய ப்ரபந்தங்களாக உருக் கொண்டது. திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி என்ற அந்நாலு ப்ரபந்தங்களும், நான்கு வேதங்களின் ஸாரமாகும். 'இயற்பா மூன்றும் வேதத்ரயம் போலே, பண்ணார் பாடல் பண்புரை இசை கொள் வேதம் போலே என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் சூர்ணிகை. கற்கவும், கற்று உட்பொருளை அறிந்து கொள்ளவும் மிக அரிதானதும், கற்பதற்கு "சதுர்விதமான தேஹவர்ண" என்றாற் போலே பற்பல நிபந்தனையுடையதுமான வேதங்களாகிற ஸாகரங்களிலிருந்து ஸாரத்தைக் க்ரஹித்து, நான்கு திவ்ய ப்ரபந்தங்களாகச் செந்தமிழிலே வெளியிட்டருளி ஸர்வர்க்கும் உபகாரம் பண்ணியருளினார், நம்மாழ்வார்.

"ப்ராப்யஸ்ய ப்ரம்ஹணோரூபம், ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந :
ப்ராப்த்யுபாயம் பலம்ப்ராப்தேஸ், ததாப்ராப்தி விரோதிச"

என்ற "மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும், தக்க நெறியும், தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும், வாழ்வினையும்" ஆகிற அர்த்த பஞ்சகத்தைத் தம் ப்ரபந்தங்களில் வெளியிட்டருளினார், ப்ரபந்ந ஜந கூடஸ்தர், ஸ்வாமி நம்மாழ்வார். அதை, "ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபிராமம்" என்று பரமாசார்யரான ஸ்ரீ ஆளவந்தார் அருளிச் செய்கிறார். நம்மாழ்வார் திருக்குருகூர் என்னும் ஆழ்வார்

திருநகரியிலே (ஆழ்வார் அவதரித்ததாலேயே இப்பெயர் ஏற்பட்டது) வைகாசி விசாகத்தில் திருவவதாரம் பண்ணியதால்,

"உண்டோ வைகாசி விசாகத்துக்கு ஒப்பொருநாள்
உண்டோ சடகோபர்க் கொப்பொருவர்—உண்டோ
திருவாய் மொழிக்கொப்பு தென்குருகைக் குண்டோ
ஒருபார் தனில் ஒக்குமூர்."

என்று மணவாள மாமுனிகளும் அருளிச் செய்கிறார்.

திருவாய் மொழியின் மணந்தரும் இன்னிசையின் பெருமையைச் சொல்லித் தலைக்கட்ட முடியாது. எனவேதான், "பெருமான் வகுளாபரணன் அருள் கூர்ந்து ஓவாது உரை ஆயிர மாமறையின் ஒரு சொல் பெறுமோ உலகிற் கவியே ?" என்றனர். "ஞானியை விக்ரஹத்தோடே ஆதரிக்கும்" என்று நம்மாழ்வாரைத் திருமேனியுடனே (மநுஷ்ய சரீரத்தோடு) பரமபதத்திற்குக் கொண்டுசெல்ல விரும்பினான் எம்பெருமான். "உபாய ப்ரதான ப்ரணவமான உறைகோயில்" ஆழ்வார் திருநகரியில் எம்பெருமானுக்கு ஸமமான முக்யத்வம் ஆழ்வாருக்கும் உண்டு. அவ்வளவு கீர்த்திமிக்க ஆழ்வாரின் இன்ப வெள்ளமான ப்ாசுரங்களை நாம் இன்றும் அள்ளிப் பருகி அநுபவிக்க முடிவது ஸ்ரீமந் நாதமுனிகளாலே தான்.

மேகமானது, ஆழியுட்புக்கு, முகர்ந்து கொடு ஆர்த்தேறி ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்து, ஆழிபோல் மின்னி, வலம்புரி போல் நின்றதிர்ந்து, சார்ங்கம் உதைத்த சரமழைபோல் பொழிகிறது. அம்மேகம் மழையைப் பொழிய ஒருமலை வேண்டியிருக்கிறது. அதே போன்று நம்மாழ்வராகிற மேகமானது வேதஸாகரங்களிலிருந்து ஸாரத்தை க்ரஹித்துக் கொண்டு வந்து நாதமுனியென்னும் மலையிலே க்ருபா வர்ஷத்தைப் பொழிந்ததால் ஏற்பட்ட இன்பவெள்ளமே நாம் இன்று அநுபவித்து வரும் பாசுரங்கள். இதையே

"பெரிய பெருமாளாகிற பெருங்கடலிலே **ஆழ்வாராகிற காளமேகம்** படிந்து, க்ருபையாகிற அம்ருத ஜலத்தைப் பானம் பண்ணி, **நாதமுனியாகிற மஹாமேருவிலே வர்ஷித்து,** பூர்வாசார்யர்களாகிற அருவிகளாலே போந்து, எம்பெருமானாராகிற ஏரியிலே தேங்கி, நம் ஆசார்யர்களாகிற மதகுகளாலே புறப்பட்டு ஸம்ஸார மாகிற கழனிக்கு ஏறிப்பாய்கிறது" என்று எம்பார் பட்டருக்கு அருளிச் செய்கிறார் (வார்த்தமாலை).

"குழலில் மலியச் சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும்" என்று ஒரு பத்துப் பாசுரங்களை. (ஆராவமுதே) கும்பகோணத்தில் ஒருவர் பாடக் கேட்ட நாதமுனிகள், பத்துப் பாசுரங்களே இவ்வளவு போக்யமென்றால் ஆயிரம் பாசுரங்களும் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று ஆசைபட்டுத் திருக்குருக்கூருக்கு வந்து, ஆழ்வாரை த்யானித்துக் கொண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பை பன்னீராயிரம் உருச் சொன்னார். நம்மாழ்வாரும் அவரைக் கடாக்ஷித்துத் தன்னிடம் ஓராயிரம் கேட்ட அவருக்கு (நாதமுனிக்கு) நாலாயிரம் பாசுரங்களையும் (பன்னிருவருமாக அருளிச் செய்தது) க்ருபை பண்ணினார். நாதமுனியும் அதைக் கானமுறத் தாளத்தில் கண்டிசைத்தார். உய்யக் கொண்டாருக்கு உபதேசித்து நானிலத்தில் (குருவரையை (குரு பரம்பரை) நாட்டினார். நம்மாழ்வாரின் அருள் பெற்ற நாதமுனி முதலான நம் ஆசார்யர்களன்றி தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மையை யாரே அறிவார்? "பிள்ளான் முதலானோர் செய்தருளும் வியாக்கியைகளன்றாகில் திருவாய் மொழிப் பொருளைத் தேர்ந்துரைக்க வல்ல குரு இக்காலத்தில் யாருண்டு?" என்று மாமுனிகள் வியந்துரைக்கின்றார். பேசிற்றே பேசும் ஏக கண்டர்களான நம் பூர்வாசார்யர்கள், ஓராண் வழியாயும் ஆசையுடையோரெல்லாம் அறிந்து கொள்ளும்படியும் முதலில் கருணையினால் உபதேசக் கதியளித்தவர் நாதமுனிகளன்றோ? சங்கப் புலவர்களைச் சங்கப்பலகையினின்றும் தள்ளிய கீர்த்தி மிக்க பாசுரங்களை நாமும் அநுபவிக்க முடிவது நாதமுனிகளின் க்ருபையினாலே தான்.

பெருமாளே தமது மகுடம் சாய்க்கும்படிக்குக் கவி பாடி ஞர் குருகைக் கதிபன் பொருநைத் துறைவன், புலமைக் கவி ராஜஞன நம்மாழ்வார். நாதமுனி அதற்கு இசை கூட்டினுர். நானிலம் அறியச் செய்தார். அபிநயம் பண்ணிஞர். இன்றும் நாதமுனி திருவம்சத்தாரான அரையரின் தாள இசையைக் கேட்டருள்கிருர் நம்மாழ்வார். அரையரின் தாளத்திலே ஒன்று நம்மாழ்வார் என்றும் மற்ருென்று நாதமுனி என்றும் சொல்லப்படும். நாதமுனி ஸேவித்த தாளத்தையே இன்றும் இராப்பத்து உத்ஸவத்தில் (திருவாய்மொழித் திருநாள்) நம்மாழ்வார் கேட்டருள்வதாகப் பெரியோர் சொல்வர். "மஸ்தகம் ஸ்ரீசடாராதிம் நாதாக்ய முகமண்டலம்" என்று ஸ்ரீராமாநுஜரின் சிரஸாகவும் திருமுகமாகவும் நம்மாழ்வாரும் நாதமுனியும் சொல்லப்படுவர்.

நமோசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஞாநவைராக்ய ராசயே |
நாதாய முநயேZகாத பகவத்பக்தி சிந்தவே | |

நம்மாழ்வார் பெருமை

ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வாருடைய பெருமைக் கடலில் சில திவலைகளைப் பருகிக்களிக்கிறோம். பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரான் முதலான மற்றையாழ்வார்களும் தோன்றிப்பிரபந்தங்களையருளிச் செய்திருந்தாலும் ஒரு கால விசேஷத்திலே அத்திருமொழிகளெல்லாம் உலகில் பிரசாரமற்று மறைந்தனவாக ஸ்ரீமந் நாதமுனிகளென்னும் பேராசிரியர் ஆழ்வார்திருநகரிக் கெழுந்தருளித் திருப்புளியாழ்வாரடியிலே நியமத்துடனிருந்து கண்ணிநுண் சிறுதாம்பென்கிற நம்மாழ்வார் துதியைப் பன்முறை ஆவ்ருத்திசெய்து யோகத்சையிலே நம்மாழ்வாரை ஸாக்ஷாத்கரிக்கப் பெற்று அவருடைய திருவாக்கிலிருந்தே நாலாயிரம் பாசுரங்களையும் அருள் செய்யப் பெற்ருரென்பது ஸம்பிரதாயம். இதுபற்றியே "நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே" என்று நம்மாழ்வார் வாழ்த்தப்பட்டு வருகிருர்

P.B. அண்ணங்கராசாரியர்

இதுவே காரணமாகத்தான் ப்ரபந்நஜந கூடஸ்தரென்கிற விருதும் நம்மாழ்வார்க்கு நிகழ்ந்து வருகின்றது. இவரையே அவயவியாகவும் மற்றையாழ்வார்களை அவயவபூதர்களாகவும் பூருவர்கள் நிரூபித்துள்ளார்கள். அப்படியே இவருடைய திவ்யப்ரபந்தங்களையே அங்கியாகவும் மற்றையாழ்வார்களினருளிச் செயல்களை அங்கோபாங்கங்களாகவும் அறுதியிட்டுள்ளார்கள்

சிலருடைய வாதமென்னவென்ருல், காலவிசேஷங்களில் ஒவ்வொரு நாட்டிலும் பக்தர்கள் தோன்றியதுண்டு அவர்கள் தங்களுடைய பக்தியினுலோ அல்லது தங்களுடைய

பாண்டித்யத்தைக் காட்டவேண்டியோ தங்களுக்கமைந்த பாஷைகளில் பிரபந்தங்களைச் செய்திருப்பதுண்டு தெலுங்கு கன்னடம் ஹிந்தீ குஜராதி மராடீ முதலான பலபாஷைகளிலும் பலபக்தர்களால் பலபல பிரபந்தங்கள் இயற்றப் பட்டேயுள்ளன. அவைபோலவே ஆழ்வார்களின் பிரபந்தங்களுமாம். துளஸிதாஸர், தியாகராயர், கம்பர், ராமதாஸர் என்றிப்படி சொல்லப்படுகிற மஹான்களுக்கும் அவர்களது நூல்களுக்கும் எவ்வளவு கௌரவமுள்ளதோ அவ்வளவு கௌரவமேதான் ஆழ்வார்களுக்கும் அவர்களின் பிரபந்தங்களுக்கும் ஏற்கும். இவற்றை வேதங்களென்றும் வேதங்களிற்காட்டிலும் சிறந்தவையென்றும் கொள்வது எதற்காக? .... என்றிப்படிப்பட்ட வாதங்கள் இக்காலத்தவர்களால் ஆங்காங்கு அட்டஹாஸமாக அறையப்படுகின்றன.

ஸ்ரீ வைஷ்ணவகுலதிலகர்களான ஆழ்வார்கள் திவ்யப் பிரபந்தமருளிச் செய்திருப்பது போலவே சைவர்களிலே நாயன்மார்கள் தேவாரத்திருமுறைகள் பணித்துள்ளார்களென்பது யாவருமறிந்ததே. அந்தப்ரபந்தங்களையாவது அவற்றை இயற்றிய பக்தர்களையாவது சிவபக்தர்களான பிராமணர்கள் யாரேனும் ஆதரிக்கிறார்களாவென்று பார்க்கவேணும். அன்றியும் வேதாந்த நிர்வாஹத்திற்கு அந்தப் பிரபந்தங்களைச் சிறிதேனும் துணை கொள்கிறார்களோவென்றும் நோக்கவேணும். சிவபலயங்களில் அவற்றுக்குப் பாராயணநியதி ஏதேனும் வைத்திருக்கிறார்களா வென்றும் ஆராயவேணும். இவையொன்றுமில்லையென்பது எங்கும் ப்ரத்யக்ஷம். யாரோ சில சதுர்த்தர்கள் அத்தேவாரங்களைப் பார்ப்பதும் பாடுவதுமாயிருக்கிறார்களேயல்லது பிராமணர்கள் அவற்றில் சிறிதும் கண் செலுத்துவதில்லை. ஆகவே வேதாந்த நிர்வாஹத்திற்கு அவற்றைத் துணைகொள்ள ப்ரஸக்தியேயில்லை. ஒரு சிவாலயத்திலும் அவற்றுக்குப் பாராயண நியதியொன்றும் காண்கின்றிலோம் இவ்விஷயங்களை இங்கு நாம் அவற்றின் மீது பழிப்பாக எழுதுவதாய் ஒருவரும் கருதலாகாது. உள்ள நிலைமையை உணர்த்து

கின்றோமத்தனை. வியாஸ பராசர வால்மீகி ப்ரப்ருதிகளான மஹர்ஷிகள் இயற்றிய இதிஹாஸ புராணங்களுக்கும் தேவாலயங்களில் ஒரு சிறப்பும் கண்டிலோம். அந்த மஹர்ஷிகளில் ஒருவரையும் ஒரு ஸன்னிதியிலும் விக்ரஹ ப்ரதிஷ்டை செய்து ஆராதனோத்ஸவாதிகள் நடத்துகிற முறையையும் காண்கின்றிலோம். துளஸிராமாயணம் கம்பராமாயணம் முதலிய மற்றுமுள்ள ப்ரபந்தங்களுக்கு எவ்வளவு மதிப்பு என்பதை உலகம் நன்கறிந்தேயுள்ளது.

இனி நம் ஆழ்வார்களினருளிச் செயல்களை யெடுத்துக் கொள்வோம். இவற்றில் இன்று நேற்று நாமும் நம்போன்றவர்களும் காட்டுகின்ற ஆகரம் கிடக்கட்டும். ப்ராஹ்மண குலதிலகராய் வடமொழி வேதவேதாந்த வேதாங்கங்களில் ஆழ அவகாஹித்து ஸகலசாஸ்த்ரார்த்தங்களையும் கையிலங்கு நெல்லிக்கனியாகக் கண்டவர்களான ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் தொடக்கமான ஆசாரியர்கள், ப்ரமாதாக்களில் ஆழ்வார்களுக்கு மேலில்லை யென்றும் ப்ரமாணங்களில் அருளிச் செயல்களுக்கு மேலில்லை யென்றும் கொண்டிருந்த கொள்கையில் யாருக்காவது விப்ரதிபத்தியுளதோ? ஸ்ரீமந்நாதமுனிகளின் வாழ்நாள் முழுவதும் திவ்யப்ரபந்தங்களைப் புநருத்தாரணம் செய்வதிலேயே பெரும்பாலும் சென்றற்றதென்று காண்கிறோம். ஆளவந்தார்க்கு ஸமரான ஸம்ஸ்க்ருதவித்வான்-சதுச்சாஸ்த்ரப்புலவர் *ந பூதோ ந பவிஷ்யதி யென்று உலகமெல்லாம் போற்றுகின்றது. அப்படிபட்ட வைபவம் பொலிந்த ஆளவந்தார் த்ரிஜகத் ப்ரஸித்தமான தம்முடைய ஸ்தோத்ரரத்னத்தில் ஆழ்வார்க்கு ஒரு ச்லோகந்தான் அருளிச்செயதுள்ளார்—*மாதா பிதா யுவதய: என்று இந்த ச்லோகம் அமைந்திருக்கு மமைப்பை என்சொல்லவல்லோம். எம்பெருமானுக்குக் கூட இப்படி யொரு சுலோகம் அமையவில்லையே. ஆழ்வாருடைய திருநாமத்தைச் சொல்லாமலே *ஆத்யஸ்ய ந: குலபதே* என்கிறாரே. இது எவ்வளவு ஆச்சரியமான பக்தியின் காரியம்! நம்முடைய ஆசார்ய பரம்பரையில் * லக்ஷ்மீநாதஸமாரம்பா மென்கிற

முதல் ஸ்தானத்தில் எம்பெருமான் நிற்பதனால்* ஆத்யஸ்ய ந: குலபதே: என்றது அப்பெருமானையே நோக்கியதாகுமென்று சிலர் கொள்ளவுங் கூடுமென்று சங்கித்து உடனே வகுளாபிராமம் என்றருளிச் செய்கிறார். மகிழ்மாலையணிந்த தெய்வத்தைப்பற்றி இங்கு நான் பேசுகின்றனேயன்றித் திருத்துழாயணிந்த தெய்வத்தைப் பற்றியன்று என்றன்றோ காட்டுகின்றார். நம்மாழ்வார் திருவாய்மொழியில் *சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும், மேலாத் தாய் தந்தையும் அவரேயினியவாரே* என்று எம்பெருமான் விஷயத்தில் காட்டின துணிபையன்றோ ஆளவந்தார் ஆழ்வார் திறத்திலே காட்டியுள்ளார் அந்த ஸ்தோத்ரரத்னத்தில் மேலே ஒவ்வொரு சுலோகமும் ஆழ்வாரருளிச் செயல்களையேயன்றோ மிகமிகத் தழுவி அவதரித்துள்ளன. ஆளவந்தாருடைய காலம் இன்றைக்கு ஆயிரமாண்டுகட்கு முற்பட்டதென்பது நிர்விவாதம். அக்காலத்திலேயேயன்றோ ஆழ்வா ஆழ்வாருடையவும் அருளிச்செயல்களுடையவும் மேன்மை ஊரும் நாடுமுலகமுமறிய நின்றது. அக்காலத்திலேயே ஆழ்வார்களுக்கு ஸன்னிதிகளில் விக்ரஹ ப்ரதிஷ்டையும் நடைபெற்றிருந்ததாக நன்கு தெரிகின்றது. எங்ஙனேயென்னில், பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் "பராங்குசாத்யா: ப்ரதமே புமாம்ஸோ நிஷேதிவாம்ஸோ தச மாம் த்யேரந்" என்றருளிச் செய்திருப்பது ஸ்பஷ்டம். இதனால் நம்மாழ்வார் முதலான ஆழ்வார்கள் பதின்மரும் அப்போது திருக்கோலங்கொண்டு எழுந்தருளியிருந்தமை கைகொள் கனியாகக் காண்கின்றது. பட்டர் உடையவர்காலத்தில் எழுந்தருளியிருந்தவரும் உடையவர் ஸ்தானத்தில் அபிஷிக்தருமாவர்.

இங்ஙனே ஒவ்வொரு ஆசார்யரும் ஆழ்வாரைப்பற்றி வாய்வெருவியிருக்கின்றமை பன்னியுரைக்குங்கால் பாரதமாம். வேதாந்ததேசிகரின் ஈடுபாடும் வாசாமகோசரம். அவருடைய திருவாக்குகளில் "செய்ய தமிழ் மாலைகள் நாம்

தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்ற பாசுரமொன்றே போதும். நஞ்சீயர், நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாளமாமுனிகள் முதலான பேராசிரியர்களின் ஈடுபாடு விவரிக்க வேண்டியதோ? ஸ்ரீ வைஷ்ணவாசார்ய பரம்பரையிலே ஸேனை முதலியார்க்கும் ஸ்ரீமந் நாதமுனிகட்கும் இடையில் நம்மாழ்வாரைச் சேர்த்து அநுஸந்தானம் பண்ணிவருகிற முறைமை இன்று நேற்றுத் தோன்றியதன்று. இதெல்லாம் கூரத்தாழ்வான் முன்னான பூருவாசாரியர்களின் திருவாக்குகளிலேயே ஸந்தேஹவிபர்யயமற விளங்கநின்றன. அப்பரமாசாரியர்களின் காலத்திலேயே திவ்யப்ரபந்தங்களானவை. தமிழ் வேதமாகவும் பாராட்டப்பெற்று திவ்யதேசங்கள் தோறும் கொண்டாடப்பட்டுவந்த விஷயம் கம்பரியற்றிய சடகோபரந்தாதியிலும் சேமம் பெற்றுளது; *அந்தமிலாமறையாயிரத் தாழ்ந்தவரும் பொருளைச் செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத்தேவர்களும் தந்தம் விழாவுமழகுமென்னும்* என்கிறார் கம்பர். திவ்யப்ரபந்தமவதரித்திராவிடில் ஸ்ரீ வைஷ்ணவ ப்ராஹ்மணர்களின் கதி என்னாகுமோ! கோவில்களின் ஸ்திதி என்னாகுமோவென்று வயிறுபிடிக்கிறார் காண்மின்.

ஆக இவ்வளவு நிரூபணங்களினால்—வேதவேதாந்தப் புலவர்களும் சதுச்சாஸ்த்ர பாரங்கதர்களும் ப்ராஹ்மணோத்தமர்களுமான நம் பூருவாசாரியாகள தமே ஒப்புமுயர்வுமறக் கௌரவித்த ஆழ்வார்களைப் பற்றியும் அருளிச்செயல்களைப் பற்றியும் சிலர் எது பேசினாலென்ன? அப்பேராசிரியர்களுடைய திருவடிகளையே தஞ்சமாகக்கொண்ட நமக்கு மனம் கலங்க ப்ரஸக்தியில்லை.

வைகாசி மாத

ராசி பலன்

குண்டலம் R. திருமலாச்சார்

மேஷம் :- (அசுவதீ, பரணீ, கார்த்திகை 1 பாதம்) இம் மாதமும் தொடர்ந்து மிகவும் அனுகூல மானதாகும். புதிய முயற்சிகள் சிறந்த பலனளிக்கும். ஏற்கனவே இருமாதகால மாக கிடைத்து வரும் புகழ் மேலும் ஓங்கி ஸ்திரப்படும். பொது வாழ்வு அரசியல் துறைகளில் வெற்றி காணலாம். குஜ, புத சுக்ரர்கள் மேஷத்தில் கூடுவதால், புத்தி பலம் தேஹபலம் இரண்டின் உதவியாலும் முன்னணியில் நிற்பீர். இராம பிரானை வணங்கினால் புகழ் ஓங்கும்.

வ்ருஷபம் :- (கார்த்திகை 2-4பாதம், ரோஹிணீ,மிருக சீர்ஷம் 1—2 பாதம்) முன் யோசனையின்றி செயல் பட்டால் அனாவசியமானதும் தவிர்க்கக் கூடியதுமான செலவினங்கள் அதிகரிக்கும். பணமாக கையில் வைத்திருப்பதை தவிர்க்க வும். இன்னும் 3 — 4 மாதங்கள் வரை எடுக்க முடியாத சேமிப்பு நிதியில் பணம் வைத்திருப்பது நலம். சிறிய கடன் கள் தீரும். கணவன் - மனைவி உறவு சீரடையும், வியாழன் தோறும் ஆஞ்சநேயரை வழிபடுவது மனதிற்கு உத்ஸாஹ மளிக்கும்.

மிதுனம் :- (மிருகசீர்ஷம் 3 – 4; திருவாதிரை புனர் பூசம் 1 – 3 பாதம்) சுற்றியுள்ளவர்களின் உதாரஸ்வபாவத் தால் நல்ல பயனடைவீர். தேவையான (மர, இரும்பு) பொருள்களை வாங்குவதற்கு அனுகூலமான காலம். வியாழக் கிழமைகளில் தொழிலும், வியாபாரத்திலும் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். வெள்ளிக்கிழமைகளில் ஆலய வழிபாடு

யோகப் பயிற்சி முதலியவற்றில் ஈடுபாடு ஏற்படும். வேலை மாற்றலுக்கோ, புதிய துறையில் வேலைக்கோ மனுச் செய்து முயற்சிக்க மிகவும் ஏற்றகாலம்.

கடகம் :- (புனர் பூசம், 4 பூசம், ஆயில்யம்)இது வரை இடையூறு செய்து வந்த ஒருவர் நேசக்கரம் நீட்டி ஒத்துழைப் பர் சற்றும் எதிர்பாராத உதவிகள் வியாழக்கிழமைகளில் கிட்டும். சுத்தமாக தோற்றமளிப்பதே பல நன்மைகள் பெற உதவும். அயல் நாடுகளுக்குச் சென்று வரவோ அல்லது அங்குள்ளவர்களுடன் தொடர்புகொள்ளவோ முயற்சிக்க ஏற்ற காலம். வியாபாரங்களில் சனிக்கிழமை லாபம் ஏற்படும். லாட்டரி ஈடுபாடு வேண்டாம். சனிப்ரீதியாக ஸ்ரீ ந்ருஸிம்ஹனை வழிபடுவது சிறந்த பலனளிக்கும்.

ஸிம்ஹம் :- (மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்) நல்ல யோசனையுடன் செயல்பட வேண்டியதவசியம். சிறிய ஸம்ப வங்கள் கூட மனதிற்கு அதிர்ச்சி தரக் கூடு மாதலால் பெருந் தன்மையோடும் தைரியத்துடனும் நிகழ்ச்சிகளை எதிர் நோக் கவும். பணவிஷயங்களில் கவனக்குறைவால் சொந்த தேவை களைக் குறைத்துக் கொள்ளவேண்டிய நிர்பந்த மேற்படும். பிறரிடம் எதிர்பார்த்த உதவிகள் தடைபடுவதுடன் ஏமாற்ற மளிக்கும் பிறர் பேச்சுகள் நம்பத்தகாதவை. துர்கா லக்ஷ்மி யை துதி செய்வதால் மன நிம்மதி உண்டாகும்.

கன்னி :- (உத்தரம் 2—4, ஹஸ்தம், சித்திரை 1—2 பாதம்) எந்தக்காரியமும் உடனே நடக்கும் போல் தோன்று மே தவிர லேசில் முடிவாகாது. நீங்களாக முயற்சித்து எது வும் செய்ய வேண்டாம். பிறர் கொடுக்கும் உதவிகளை முழு மையாகப் பயன்படுத்தத் தவறாதீர். எதிர்பாராத விருந்தினர் களால் சாப்பாட்டுச் செலவு அதிகரிக்கும். உபயோகமற்ற சர்ச்சைகளில் ஈடுபட நேரும். ஆதலால் கூடியவரை வாதம் செய்வதை தவிர்க்கவும், உடல் நலனை பேணுவதவசியம். ஏழரை நாட்டு சனியாதலால் சனிக்கிழமை தோறுமாவது ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் செய்வதவசியம்

துலாம் :- (சித்திரை 3—4, ஸ்வாதீ, விசாகம் 1—3) திங்கட் கிழமைகள் அதிர்ஷ்டமானவை. குடும்ப சூழ்நிலை நன்றாக இருக்கும். வெளியூர் செல்வதற்கு வியாழன், வெள்ளி சனிக்கிழமைகள் அனுகூலம். அயல் நாட்டினருடைய உத்ஸாஹமான ஒத்துழைப்புடன் முன்னேற்றம் காண்ப துடன் திரவிய லாபமும் பெறலாம் கூட்டுறவுத்துறை ஸம்பந்த முயற்சிகளில் ஈடுபாடு வேண்டாம். மற்றவரிடம் சற்று விட்டுக்கொடுத்துப் பழகாவிடில் சூழ்நிலையே மாறி மன வருத்தம் ஏற்படும் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். லாட்டரியில் சிறு லாபமுண்டு.

விருச்சிகம் :- (விசாகம் 4, அனுஷம், கேட்டை) மன நிறைவுடன் வாழலாம். தொடர்ந்த காரியங்கள் நன்கு முடிவடையும். புதன் கிழமைகளில் உடன் பிறந்தவர்களால் மகிழ்ச்சிகரமான காரியங்களில் ஈடுபடுவீர். பிறருக்கு ஆறுதலும் உத்ஸாஹமும் கொடுத்து மகிழ்ச்சி அடைவீர். போட்டிகளில் சுலபமாக வெற்றி காண்பீர். செவ்வாய், வெள்ளி மாலைகளிலும், வியாழன் காலைகளிலும் பிறரை ஸந்திக்கவும் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் ஏற்ற காலம். திங்கட் கிழமைகளில் முக்கிய காரியங்களைத் தவிர்க்கவும். லாட்டரி யில் நல்ல பலன் காணலாம்.

தனுஸு :- (மூலம், பூராடம், உத்தராடம் 1 பாதம்) தொழில் துறையிலும், நிதி விஷயங்களிலும் மற்றவர் திறமை சாலிகளாயிருந்தாலும், அவர் வார்த்தை கேட்பது நன்மை செய்யாததுடன் தீமை விளைவிக்கும் ஆதலால் மிகவும் கவனமாக இருக்கவும். வியாழன்களில் குறித்த காலத்தில் செயல் பட முடியாததால் அதிக அவகாசத்துடன் திட்டமிடவும். வரவேற்புகளிலும், விளையாட்டாலும் தேவையற்ற செலவு அதிகரிக்கும் ஆயினும் பந்தயங்களில் ஈடுபடுவது சற்று ஸந்தோஷமாயும் லாபமாயும் இருக்கும். நல்ல எதிர் காலம் உண்டு.

மகரம் :- (உத்தராடம் 2—4; திருவோணம் அவிட்டம் 1—2 பாதம்) கடந்த வருட முதலீடு இப்பொழுது பலனளிக்கும். காலை வேலைகளைவிட மாலை வேளைகளில் முக்கிய வேலைகளில் ஈடுபடுவது நன்மை தரும். அடிக்கடி வெளியூர் சென்று வரவேண்டியிருக்கும். விருந்தாளிகளால் செலவு அதிகரிக்கும். ஏழுவருட முன் பழகியவர்களின் தொடர்பு திரும்ப ஏற்படுவதால் நன்மை உண்டு. புதன் கிழமைகளில் ஈடுபடும் செயல்கள் முழுதும் பயனளிக்கும், ஸித்தார்த்தி வருட பின் பாதியின் தேவைகளுக்கு இது முதல் பணம் சேர்க்க வேண்டியதவசியம். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். ஸுந்தர காண்ட பாராயணம் செய்வது மிகவும் நல்லது.

கும்பம் ;- (அவிட்டம் 3—4 சதயம், பூரட்டாதி 1—3) எதிர்பாலரால் மகிழ்ச்சியுடன் வாழலாம். எதிர்கால திட்டங்களில் முக்கியமான மாறுதல் ஏற்படும். தன்னம்பிக்கையுடன் செயல்பட ஆரம்பிக்கலாம். வெள்ளி, சனிக்கிழமைகளில் தன வரவு உண்டு. அடுத்துவரும் மாதங்களில் நன்மை ஏற்படும் ஆதலால், தைரியமாகவும், கவனமாகவும், சிக்கனமாகவும் இருக்கவும். பிறருடன் அதிகம் பழக வேண்டாம். வியாழன் தோறும் நம்மாழ்வார் திருவாய்மொழி ஏழாம் பத்து ஆழியெழ என்ற நான்காம் திருவாய் மொழியைக் கற்பது இவ் வருடம் வாழ்க்கையில் எல்லாவகையிலும் விரோதியைப் போக்கி வெற்றியையும் ஐச்வர்யத்தையும் கொடுக்கும்.

மீனம் :. (பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி) புதிய ஆடைகள் வாங்க ஏற்ற தருணம். வீடு அல்லது தொழிலிடம் மாறுவதற்கும் உகந்த நல்ல காலம். புதிய சூழ்நிலைகளால் மிகுந்த வருமானம் ஏற்படும். உங்கள் செல்வாக்கு ஓங்கும். நிறைய சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள நேரும். திருமணமாகாதவற்கு திருமணமும். ஸந்ததி இல்லாதார்க்கு ஸந்ததியும் பகவானருளுடன் கிட்டும். வியாழக்கிழமைகளில் போட்டிகளில் வெற்றியும் லாட்டரி பரிசும் கிடைக்கும். பொதுவாக மிக அதிர்ஷ்டமான மாதமாகும்.

வைகாசி மாதம் பிறந்தவர்களுக்கு வருட பலன்

திட மனமும் தன்னம்பிக்கை மிக்கதுமான உங்களுக்கு இவ்வருடம் காலத்தை அனுசரிப்பதாலும், தோழர்களின் உதவியாலும் ஸுலபமாகச் செல்லும் ஆவணி மாதம் முதல் குரு ஸிம்ஹத்தில் ஸஞ்சரிப்பதால் வீட்டில் குடும்பம் அமைதியாயும் இன்பமாயும் முன்னேக்கிச் செயல்படும். குடும்பத்தின் எல்லா நபர்களும் ஒன்று சேர்ந்து ஒரு முக்கிய நிகழ்ச்சியில் ஈடுபடுவர். மண வயதுள்ள சிறுவர்களுக்குத் திருமணமும், நல்ல ஸந்ததிகளும் வாய்க்கும காலமாகும். இதில் நல்ல மேன்மைவேண்டுவோர், நம்மாழ்வார் திருவாய்மொழி 8 ம் பத்து 10–ம் திருவாய் மொழியாகிய நெடுமாற்கடிமையைப் பாராயணம் செய்தால், தாங்கள் விரும்பிய மனைவி மக்களைப் பெற்று செல்வம் மல்கி ஒற்றுமையுடன் நல்ல குடும்ப வாழ்க்கை நடத்துவராவர்.

சொந்த வியாபாரத்தில் ஈடுபடுவோர் அதை விரிவு படுத்தவும் கூட்டு சேரவும் நல்ல காலம். நிலம், வீடு விற்பனை பேரங்கள் வருட முடிவில் நல்ல லாபமளிக்கும். வைகாசி மாத முழுவதும் குஜ புத, சுக்ரர்களின் சேர்க்கை உங்களுக்கு சுறுசுறுப்பான தொழில் ஈடுபாட்டை ஊக்குவிக்கும்.

பதவி கௌரவம், வருமானம் அதிகரிக்கும். இதனால் வியாபாரம் மாற்றம், புது ஈடுபாடு முதலியவற்றை வெற்றிகரமாகச் செய்ய முடியும். ஆனாலும் புரட்டாசி 15 முதல் ஐப்பசி 15 வரை நிதானமாகச் செயல் படுவதுடன் வதந்திகளை நம்பாமல் இருக்க வேணும். இல்லையேல் சில அவஸர வேலைகள் நஷ்டத்தில் முடியும்.

ஆனி மாத முதல் உடல் நலம் மிக நன்றாகத் தேறி ரௌத்திரி வருடம் முடிய ரோகமின்றி திடமாக வாழ்ந்து நல்ல பயனை அனுபவிப்பீர். உள் நாட்டில் வேடிக்கையான சிறு சுற்றுப்பயணங்கள் மகிழ்ச்சியைக் கொடுக்கும் பொதுவாக வருடபின்பாதி முதல் மிகவும் நல்ல காலம் ஆரம்பமாகிறது.

நம்மாழ்வார்

ஆழ்வார் — ஆசாரியர் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தை வளர்த்த பெரியோர்களை ஆழ்வார்களென்றும் ஆசாரியர்களென்றும் கூறலாம். ஆனால், ஆழ்வார் ஆசாரியராக இருக்க மாட்டார் ஆசாரியர் ஆழ்வாராகமாட்டார். ஆழ்வார்களுள் ஒருவர் மட்டும் ஆழ்வாராகவும் ஆசாரியராகவும் விளங்குகிறார். அவரே நம்மாழ்வார். ஆழ்வார்களுள் மிக சிறந்தவர் இவர். பகவான், பிராட்டி, விஷ்வக்ஸேநர் ஆகிய மூவருக்கும் அடுத்த படியாக ஆசாரியராக விளங்குபவர் நம்மாழ்வர் ஒருவரே. ஆசாரியவரர் ராமநுஜர்: பரமாசாரியர் நம்மாழ்வர்; பிரதமாசாரியர் பகவான். ஆதலால், ஆழ்வார் என்ற பெருமையும் ஆசாரியர் என்ற பெருமையும் நம்மாழ்வாருக்கே பொருந்தும்.

ஸ்தலசயனத்துறைவார்

தெற்கே முளைத்த சூரியன் கதிரவன் கிழக்கே உதிக்கிறான், மேற்கே மறைகிறான். கடலில் தோன்றுவதாகவே காட்சியளிக்கிறான். மாலையில் அவ்வாறே மறைகிறான். நம்மாழ்வாருக்கு 'வகுள பூஷண பாஸ்கரர்' (மகிழ்மாலை அணிந்துள்ள சூரியன்) என்று திருநாமம். இந்தச் சூரியன் தெற்கே தோன்றினார். கடலில் அன்று ! தாமிர வருணி நதிக்கரையில்! வானில் செல்லுகின்ற சூரியனால் செய்ய முடியாததை இவர் செய்தார். சூரியன் ஆயிரம் கிரணங்களால் புறவிருளை நீக்குகிறான். அவனது கிரணங்கள் செல்லாத இடமே இல்லை ஆனால், மக்களின் மனத்துள் சென்று அகவிருளை (அறியாமையை) அவனால் நீக்க முடியவில்லை. அதற்கு நம்மாழ்வாரே

அவதரிக்க வேண்டி இருந்தது. ஆழ்வார் அவதரித்துத் தம் ஆயிரம் பாசுரங்களால் (பாடல்களால்) மக்களின் அகவிருளை நீக்கினார். உலகில் சத்துவ குணம் மேலோங்கியது. அனைவரும் அவரது அருளால் ஸ்ரீமந் நாராயணனை உள்ளபடி அறியும் ஞானியராக ஆயினர்.

வேதம் தமிழ் செய்த மாறன் : பகவானே பூமியில் நம்மாழ்வாராக அவதரித்தார். திருவனந்தாழ்வானும் (ஆதிசேஷனும்) நம்மாழ்வார் வசிப்பதற்கு ஏற்றவாறு நிழல் தரும் உறங்காப்புளிய மரமாக அவதரித்து நின்றார். மழையும் வெய்யிலும் படாமல் இவரைப் பாதுகாக்கத் தயாராக இருந்தார். நம்மாழ்வார் உலக இயல்புக்கு மாறாகவே வளர்ந்து வந்தார். அழுவதோ, பால்குடிப்பதோ ஒன்றையும் செய்யவில்லை. தாய் தந்தையர் குழந்தையின் நிலையைக் கண்டு வியந்தனர். ஆழ்வார் அவதரித்த இடத்தை 'ஆழ்வார் திருநகரி' என்று இப்போதும் கூறுகின்றனர். இதற்குத் 'திருக்குருகூர்' என்றும் பெயர். இவ்வூரிலுள்ள ஆதிப்பிரான் ஸன்னிதிக்கு நம்மாழ்வாராகிய குழந்தையை எடுத்துச் சென்றனர். 'மாறன்' என்று பெயர் இட்டனர்.

ருக்வேதம், யஜுர் வேதம், ஸாமவேதம், அதர்வண வேதம் என்று வேதங்கள் நான்கு. இவை ஸம்ஸ்கிருத மொழியில் இருக்கின்றன. இவற்றைக் கற்கத் தகுந்தவர் சிலரே. எல்லோருக்கும் இவை பயன்படவில்லை. கடலில் நீர் நிறைந்திருக்கிறது; ஆனால் பருகுவதற்கு ஏற்றதன்று; தாகத்திற்குப் பயன்படாது. மேகம் அதைப்பருகி அமுதம் போன்ற மழையைத் தருகிறது. அது அனைவருக்கும் பயன் படுகிறது அவ்வாறு ஸம்ஸ்கிருத வேதங்கள் நம்மாழ்வாரின் திருவாக்கிலிருந்து நான்கு திவ்வியப்பிரபந்தங்களாக வெளி வந்தன. ருக்வேதம் திருவிருத்தமாகவும், யஜுர்வேதம் திருவாசிரியமாகவும் வெளிவந்தன. ஸாமவேதமே திருவாய் மொழி; அதர்வணமே பெரிய திருவந்தாதி. ஆதலால் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி ஆகிய நான்கும் மாறன் பணித்த தமிழ் மறைகள்

பராங்குசனே ! நாரணனே ! நம்மாழ்வாரின் சீடர் மதுர கவிகள். இவர் வாயிலாகவே நம்மாழ்வாரின் பெருமைகளை அறியமுடியும். நம்மாழ்வார் தன்னடிச் சோதிக்கு (பரம பதத்திற்கு) எழுந்தருளிய பிறகு மதுரகவிகள் மிகவும் வருந்தினர். ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வாரின் திருவுருவத்தை (அர்ச்சாவதாரத் திருமேனியை) பிரதிஷ்டை செய்தார். ஆடுவார்; பாடுவார்; திருவிழா நடத்துவார்; ஆழ்வாரையே சிந்தித்து மனமுருகுவார்; வணங்குவார் கண்ணீர் மல்கி இருப்பார் 'ஆழ்வீர் !' என்று அலறுவார் 'தெய்வப் புலவர் வந்தார் ! ஞானசிரியர் வந்தார் ! தீமனம் கெடுத்த திருவருளார் வந்தார் ! திருமாலவன் கவி வந்தார் ! என்று போற்றுவார். இவ்வுரைகள் திருமாலடியார்களுக்கு அமுத மழையாகவும், புற சமய வாதிகளுக்குப் பேரிடியாகவும் இருந்தன. சங்கப் புலவர்களிடையே பெரிய சல சலப்பு ! 'ஆழ்வார் பக்தரே யன்றிப் பகவானல்லர்; திருவாய்மொழியும் சங்கநூல் அன்று' என்று கூறினர். மதுர கவிகள் மிகவும் வருந்தினர் அவரது கனவில் நம்மாழ்வார் வயது முதிர்ந்த ஓர் அந்தணராகத் தோன்றினர். 'கண்ணன் கழலிணை' என்று ஓர் ஓலையில் எழுதி மதுரகவிகளிடம் கொடுத்து மறைந்தார். மதுரகவிகள் இவ்வோலையைச் சங்கப் பலகையில் ஏற்றினர். புலவர்கள் மற்ற நூல்களையும் ஏற்றினர். அந்தோ ! மற்ற நூல்களெல்லாம் குளத்தில் விழுந்து மறைந்தன; சங்கப்பலகை 'கண்ணன் கழலிணையைத் தாங்கிக் கொண்டு கரையை வந்தடைந்தது புலவர்களின் செருக்கு அடங்கியது; ஆழ்வாரைத் தெய்வமென்று வாழ்த்தினர்.

'சேமம் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ — தாமம்
துளவமோ வகுளமோ தோளிரண்டோ நான்கு
முளவோ பெருமானுக்கு !

என்று அடக்கத்தோடு கூறிப்பணிந்தனர். ஆம்! 'வகுளாபரணன் அருளாயிரமறையின் ஒரு சொல் பொறுமோ! உலகியற்கவியே!' பொருது! பொருது !போற்றப் பொருது!

அருள்மாறன் அருள்மாரி : நம்மாழ்வாரால் பகவானின் திருவருள் இன்றும் நமக்குக் கிடைக்கிறது. பகவான் கருணைக் கடல்! நம்மாழ்வார் கருமுகில் (மேகம்). இக்காள மேகம் பகவானிடமிருந்து (கருணைக் கடலிலிருந்து) கருணை நீரைப் பருகியது. நாதமுனிகளாகிற மலையின் மீது அருள் மழையைப் பொழிந்தது! அம்மழைநீர் உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி என்ற இரண்டு ஆறுகளாக ஓடியது. பிறகு 'ஆளவந்தார்' என்கிற பேராற்றில் கலந்தது; ஸ்ரீ ராமாநுஜராகிய ஏரியில் நிறைந்துத் தேங்கி நின்றது எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளாகிற மதகுகளின் வழியாக அருள் வெள்ளம் நம்மிடம் வந்து நம்மை வளரச் செய்கிறது என்று பெரியோர் கூறுவர். சடகோபன் வாழ்க! சடகோபன் தண்டமிழ் நூல் வாழ்க! மாறனடி பணிந்துய்ந்த இராமாநுசன் வாழ்க!

'கோதை தமிழ்'

"கோதை தமிழ் ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை வையம்சுமப்பது வம்பு'' - என்று அழகாகச் சொன்ன சிறப்பையும் நினைத்துத் திருப்பாவையையும் நினைத்தால் பல புதிய நயங்கள் புலப்படும். திருப்பாவைக்கு உள்ள கவர்ச்சியும் அழகும், பொருள் நுணுக்கமும் வேறெந்தப் பாவை நூலுக்கும் இல்லை என்பது என் கருத்து.

''திருப்பாவைப் பாசுரங்கள் அனைத்தும் ஸ்ரீ ஆண்டாளால் அருளிச் செய்யப்பட்டவை அல்ல என்றும் அவை பெரியாழ்வாராலோ அல்லது பிறராலோ இயற்றப்பட்டுக் காலகதியில் ஆண்டாளே இயற்றியவையாக வழக்கத்தில் வந்திருக்கலாமென்றும்'' கூறுகிறவர்கள் இருக்கிறார்கள்.

தீபம் நா. பார்த்தசாரதி

இந்தக் கூற்று அபத்தமானது மட்டுமல்லாமல் அறியாமை மிக்கதும் ஆகும். இப்படிக் கூறுகிறவர்கள் எவ்வளவு பிரபலமானவர்களாக இருந்தாலும், எவ்வளவு பெரிய பிரமுகர்களாக இருந்தாலும் இது அதிகப்பிரசங்கித்தனமானது என்பதில் இரண்டாவது அபிப்ராயத்துக்கே இடமில்லை.

திருப்பாவையில் நிரம்பியிருப்பதாக இங்கே நான் கூறும் நயங்களும் கவிதை அழகும், பொருள் நுணுக்கங்களும் அது ஸ்ரீ ஆண்டாளைப் போல ஒரு பேதைப் பருவத்துக் கன்னிப் பெண்ணால் பாடப்பட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டவை. திருப்பாவையின் பாணி (Pattern) அந்நூலில் பயன் படுத்தப்பட்டுள்ள கவிச் சொல்லாட்சி (Poetic diction) கிளத்து முறை (Line of approach) எல்லாமே அது கோதைக் குறிய தமிழ் என்பதைப் பறை சாற்றுகின்றன. பெண்

களுக்கேயுரிய சின்னச் சின்ன வாக்கியங்களில் பெரிய பெரிய விஷயங்களைப் பன்னிப் பன்னிச் சொல்லும் தன்மை திருப்பாவையில் காணப்படுகிறது. **உங்கள் புழைக்கடைத் தோட்டம், மாரிமலை முழைஞ்சில், கீசு கீசென்னும் ஆனைச் சாத்தம், நந்தகோபன் குமரன், யசோதை இளஞ்சிங்கம்** என்னும் தொடர்கள் பெண்கள் பழக்கத்தில் வார்த்தைகள் தொடுக்கப் படும் பாணியில்தான் அமைந்துள்ளன. **'சிற்றம் சிறுகாலே வந்து'** போன்ற பிரயோகங்கள் **'காலங்கார்த்தாலே'** என்று இப்போது பெண்கள் கூறும் சொற்றொடர்கள் போன்றவை. 'Communication Pattern of Women' — என்று ஒவ்வொரு மொழியிலும் ஒருபாணி இருக்கிறது அந்தப் பாணி பேச்சு மொழியில், கவிதை நடையில், சொற்பொழிவு நடையில், எழுத்து நடையில் தனித் தன்மையைக் காட்டக் கூடியது ஆகும்.

ஆண்டாள் என்னும் இளம் பெண் பாவை நோன்பு நோற்றுப் பாடிய கவிதைகளாகிய திருப்பாவைப் பாடல்களிலும் இந்த வகைத் தனித்தன்மை அமைந்திருப்பதைச் சொல்லுக்குச் சொல் நிரூபிக்க முடியும். அதற்கான சான்றுகள் திருப்பாவை முழுவதும் நிரம்பிக் கிடப்பது கற்றோர்க்குப் புரியக் கூடியது. முன்பே அவ்வாறு கற்றுத் தேர்ந்து நயங் கண்ட மகிழ்ச்சியினால் தான், **"கோதை தமிழ் ஐயைந்து மைந்து மறியாதமானிடரை வையம் சுமப்பது வம்பு"** என்று கூறிப்பாராட்டியிருக்கிறார். பிற்காலத்தில் அபத்தமான ஆராய்ச்சிகள் தோன்றக் கூடும் என்று சந்தேகப்பட்டு அதற்காகவே கூறியவரைப் போலக் **'கோதை தமிழ்'** என்று. எழுதியவரையும் எழுத்தையும் மிக அழகிய தொடரால் இணைத்துப் பாராட்டி விட்டுப் போயிருக்கிறார்கள் முன்னோர்.

கோதை தமிழைப் புரிந்து இனங்கண்டு கொண்டாடுங்கள்! அது கோதை தமிழ் மட்டுமில்லை. குமரித்தமிழ்; கன்னித் தமிழ்; பாவைத் தமிழ்; பைந்தமிழ், பக்தித் தமிழ்.

"திருவாய்மொழியும் த்வயமும்"

இனி திருவாய் மொழியில் நான்காம்பத்தில் கூறப்பட்ட சரண சப்தார்த்தத்தை யநுபவிப்போம். சரணம்—உபாயமாக அதாவது அநிஷ்டநிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் தப்பாத உபாயமாக என்றபடி "உபாயே க்ருஹரக்ஷித்ரோ: சப்த: சரணமித்யயம் வர்த்ததே, ஸாம்ப்ரதம் சைஷ உபாயார்த்தைகவாசக:" என்கிறபடியே இந்த சரணசப்தம் உபாயத்தையும் க்ருஹத்தையும் ரக்ஷிதாவையும் காட்டவற்ரு யிருக்கும் ஆயினும் இவ்விடத்தில் உபாயத்தையே காட்டும். ரக்ஷகமென்றும் உபாயமென்றும் பர்யாயமென்று சொல்லிப் போருவர்கள். அங்ஙனன்றியே ரக்ஷகனும் வேறேயாய் உபாயமும் வேறேயாயிருக்க வேண்டியிருந்தது இந்த

வேளுக்குடி K. வரதாசாரியர்

ப்ரமாணத்தால். ரக்ஷகனென்ருல் ஸாதாரண ரக்ஷணத்துக்கு உபாயங்களுக்கும் ப்ரபந்நனுக்கும் பொதுவாயிருக்கும். உபாயமென்று விசேஷித்தால் ப்ரபந்நனுக்கு அஸாதாரணமாயிருக்கும் எந்த பலத்துக்காகவென்னில் :- இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்டநிவாரணத்துக்கும் தப்பாத உபாயம். அநிஷ்டமாவது —"நீர்நுமது என்றிவை வேர்முதல் மாய்த்து" என்றும், அநாத்மந்யாத்ம புத்திர்வா அஸ்வேஸ்மிதி யாமதி :" என்றும் சொல்லுகிறபடியே ஆத்மாவல்லாத தேஹத்தை ஆத்மாவாக புத்தி பண்ணுகையும் தன்னதல்லாத வஸ்துவைத் தன்னதாக அபிமாநிக்கையுமாகிற அவித்யையும், அவித்யாகார்யமான ராகத்வேஷாதிகளும் கரணத்ரயத்தாலே செய்யப்படும் புண்யபாப ரூபகர்மங்களும் கர்மத்வயத்தினுடைய பல

போகார்த்தமாகப் பரிக்ரஹிக்கும் தேவதிர்யங் மநுஷ்ய ஸ்தாவர ரூப நாநாவித சரீரங்களும் அவ்வவ சரீரங்களைப் பெற்று அநுபவிக்கும் ஆத்யாத்மிகாதி து:க்கபரம்பரைகளும் தொடக்கமானவை.

இஷ்டமாகிறது புண்யபாப கர்ம விதூநநப்ரகாரமும் ஹார்தமார்க விசேஷப்ரகாரமும், ஹ்ருதய குஹா நிர்கமநமும், அர்ச்சிர் வாஸரோத்தராயண சுக்லபக்ஷாத்யாதிவாஹிகயத்காரமும், ஸலிலதஹந பவநாத்யாவரண ஸப்தகாதிலங்கநமும், திரிகுணதிக்ரமணமும், விரஜாக்ய அப்ராக்ருத நதீவிசேஷாவகாஹநமும், ஸூக்ஷ்மசரீர விமோசநமும் அமாநவகரஸ்பர்சமும், அபஹதபாப்மத்வாதி குண கணததாச்ரய ஸ்வரூப ப்ரகாரமும், பஞ்சோபநிஷந் மயமான திவ்ய விக்ரஹபரிக்ரஹமும், ஐரம்மதீய திவ்யஸர: ப்ராப்தியும், திவ்யா ப்ஸரஸ்ஸங்கஸத்காரமும், ப்ரஹ்மாலங்காராலங்கரணமும், ப்ரஹ்மகந்த ராயதேஜ: ப்ரவேசமும், திவ்ய கோபுர ப்ராப்தியும், ஸூரி ஸங்கஸத்காரமும் ராஜமார்க கமநமும் ப்ரஹ்மவேச்ம ப்ரவேசமும் திவ்ய மண்டப ப்ராப்தியும், திவ்ய பர்யங்க நிரீக்ஷணமும் ஸபத்நீக ஸர்வேச்வர தர்சநமும் ஆநந்த மய பரமாத்ம ஸமீபஸத்தியும் பாதபீட பர்யங்கோத்ஸங்கா ரோஹணமும் ஆலோக ஆலாப ஆலிங்கநாத் யநுபவமும் ஸ்வரூபகுண விக்ரஹாத்யநுபவஜநித ப்ரீதி ப்ரகர்ஷமும் நாநாவித விக்ரஹ பரிக்ரஹபூர்வக ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்த்தோசித ஸர்வப்ரகார கைங்கர்ய கரணமும். இப்படிப்பட்ட அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்ட ப்ராப்திக்கும் தப்பாத உபாயத்தைச் சொல்லுகிறது சரணசப்தம் என்றபடி.

த்வயத்தில் பூர்வ வாக்யத்தில் ஸ்ரீமந் நாராயண சரணௌ என்ற விதனை ஸமஸ்த பதமாகவும் வ்யஸ்தபதமாகவும் கொண்டு நிர்வஹித்தருளுவர் நம் பூர்வர்கள். ஸ்ரீமந் நாராயண சரணௌ என்ற விதனை ஏகபதமாகக் கொண்டு

நிர்வஹித்தார் ஸ்ரீ பராசரபட்டா அஷ்டச்லோகியில் "ஷட்ப தோऽயம் த்விகண்ட:" என்று "கமலநயந வாஸுதேவ பவ சரணம்" என்றும் "த்வமேவ உபாய பூதோ மே பவ" என்றும், "உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்றும். 'த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே" என்றும், "த்வத் பாதாரவிந்த யுகளம் ஶரணம் அஹம் ப்ரபத்யே" என்றும் தொடக்கமான ப்ரமாண ஜாலங்களையும் ஆராய்ந்தால் ஸ்ரீமந் நாராயண என்று இரண்டையும் விளி யாக்கி தவ என்று ஒரு பதத்தை அத்யாஹரித்தும் யோஜிப்பர் கள். "இதம் அஷ்டபதம் வ்யாஸே ஸமாஸேஷட்பதம் விது;" என்று தேசிகனும் அருளிச் செய்துள்ளார். எவ்வாறுயினும் ஸ்ரீமந் நாராயண சரணௌ என்று கீழே கூறப்பட்டது ஸ்ரீமத்வமும் குணயோகமும் திவ்யவிக்ரஹயோகமுமாகும். இம்மூன்றுக்கும் ஶேஷித்வாநுகுணமாகவும் ஸம்பந்தமுண்டு. ஆயினும் இப்போது ஸ்ரீய:பதியாய் ஸமஸ்த கல்யாண குண யுக்தனாய் திவ்ய விக்ரஹோபேதனுயிருக்கிறவன் உபாயபூதன் என்கிறது ஶரண ஶப்தத்தால்.

அன்புள்ள கீதாசார்யரே!

R. வெங்கட ராமாநுஜதாஸன் — **சென்னை.**

சித்திரை இதழ் ஆசிரியர் பக்கத்தில் **நாயகனைப் பிரிந்த நாயகி** என்றுள்ளது. இது தவறு. **நாயகனைப் பின் சென்ற நாயகி** என்றிருத்தல் வேண்டும். இது உடன் போக்கு.

ஸ்ரீனிவாசன் — **அம்பத்தூர்.**

சித்திரை இதழில் என் ராசிபலன் பகுதி வெளியிடவில்லை? அந்தப்பகுதியை நிறுத்தி விட்டீர்களா என்ன? தயவு செய்து ராசி பலனைத் தொடர்ந்து வெளியிடுங்கள். (இம் மாதிரி அநேகர் எழுதியிருக்கிறார்கள். இனி ராசிபலன் பகுதி தடைபடாமல் தொடர்ந்து வெளிவரும். ஆ—ர்)

K. G. V. Doss — **Madras-20**

I like your magazine and I enjoy reading the same. The cover photo is Top Class. But why don't you introduce one or two English articles ?

பாபு — **சென்னை-1**

பிரேமா வரதனின் 'ஒரு துளி' என்ற கட்டுரை கீதாசார்யனின் கிரீடத்தில் மேலும் ஒரு நல்முத்தாக ஒளிர்கிறது. தொடர்ந்து சித்திரை இதழில் வந்த 'அன்பு' என்ற கட்டுரையும் மிக நன்றாக இருந்தது. இது போலவே பல புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி அவர்களது கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடும்படி வேண்டுகிறேன்.

ஸ்ரீ

புத்தக மதிப்புரை

[தென்கலை நித்யாநுஸந்தானம்—176 பக்கம், தென்கலை நித்யாநுஷ்டானக்ரமம் — 96 பக்கம். ஸ்ரீவைஷ்ணவர் வாழ்க்கையில் வெற்றி பெற — 40 பக்கம். இவை ஸ்ரீ பி. ஸ்தல சயனத் துறைவார் பரிசோதித்தவை. விலை ரூ. 7-20 வடகலை நித்யாநுஸந்தானம் — 202 பக்கம், ஸம்பாதகர் — ஸ்ரீ ப. ந. ஸ்ரீராமதேசிகாசாரியர். வடகலை நித்யாநுஷ்டானக்ரமம் — 128 பக்கம். ஸ்ரீவைஷ்ணவர் வாழ்க்கையில் வெற்றி பெற — 40 பக்கம். ஸ்ரீ தி. ந. ச. கூ. லக்ஷ்மீ நரஸிம்மாச்சாரியர் பரிசோதித்தது ஒவ்வொன்றும்விலை ரூ 7-20. இவை நாலுக்கும் இலவச இணைப்பு — ஸ்ரீவைஷ்ணவ பரிபாஷையும் சில ஸத்விஷயங்களும், ஸ்ரீ வே.வேங்கடேசன் தொகுத்தது. இவை வெளியிட்டோர்—லிலிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை 17.]

இரண்டு நித்யாநுஸந்தான புத்தகங்களும் நேர்த்தியான முறையில் நல்ல காகிதத்தில் சுத்தமாக அச்சிடப்பட்டுள்ளன. தென்கலைப் பதிப்பில் முன்னடி — பின்னடி ஸேவாக்ரமமும் தரப் பட்டுள்ளது. ஆழ்வார்களுடைய பாசுரங்களுடன் அந்தந்த ஸம்ப்ரதாயத்துக்கு ஏற்ப மணவாள மாமுனிகள், வேதாந்த தேசிகர் இவர்களுடைய பிரபந்தங்கள் சேர்க்கப் பட்டுள்ளன. வடகலைப் பதிப்பில் ஸ்ரீ அஹோபிலமடம், ஸ்ரீ பரகாலமடம், ஸ்ரீமத் ஆண்டவன், ஸ்ரீ நாவல்பாக்கம் ஸ்வாமிகள், ஸ்ரீ கேதண்டபட்டி ஸ்வாமிகள் இப்படியாக 5 ஆசார்ய பரம்பரை தனியன்கள், ஆசார்யர்களின் திரு உருவப் படங்கள் இவை சேர்க்கப்பட்டுள்ளன. அந்தந்த ஸம்ப்ரதா

யஸ்தர்களுக்கும் மிகவும் உபயோகமாயிருக்கும் ஸ்ரீவைஷ்ண வர்களுக்கு நல்ல தொண்டுகளை லிப்கோ ஸ்தாபனத்தார் செய்து வருகின்றனர் என்பதற்கு நல்ல சான்று இப் புத்தகங்கள்.

இரண்டு நித்யாநுஷ்டான க்ரமங்களிலும், ஸந்த்யா வந்தனம், திருவாராதனம், அமாவஸ்யை முதலான தர்ப் பணம், உபாக்ரமம் இவைகளுக்கான மந்த்ரங்கள், ப்ரயோகங் கள் முதலியவை சேர்க்கப்பட்டுள்ளன. இரண்டு புத்தகங் களிலும் "வாழ்க்கையில் வெற்றி பெற" என்ற அநுபந்தம் சேர்க்கப்பட்டுள்ளது. இதில் பல பொது விஷயங்கள் சேர்க்கப் பட்டுள்ளன தென்கலை புத்தகத்தை விட வடகலை புத்தகம் விரிவாக அமைந்துள்ளது. திருவாராதனத்தில் பாத்ரங் களின் அமைப்பு வெவ்வேருகத் தரப்பட்டுள்ளது. இப்படி ஒரு தென்கலை வடகலை வித்தியாஸம் இருப்பதாகத் தெரிய வில்லை.

இலவச இணைப்பான புத்தகம் மிகச்சிறு எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது படிக்க சிறிது சிரமமாக உள்ளது. மதப்பற்றுடன் பகவத் பக்தியுடன் நல்லவர்களாக யாவரும் வாழவேண்டும் என்ற நோக்கத்துடன் பல விஷயங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலுமாகச் சேர்க்கப் பட்டுள்ளன. நெற்றிக்கு இட்டுக் கொள்ளுதல் நலம்; பலர் மஹாவிச் வாஸத்துடன் இதைச் செய்து வந்தனர் என்று பலருடைய உருவப்படங்களை வெளியிட்டுள்ளார்கள். இவைகளில் முதல் முன்னம் ராஜாஜியும் ஸி. பி. ராமஸ்வாமி அய்யரும் காட்சி தருவது வியப்பாகத் தோன்றுகிறது. அவர்கள் அம்மாதிரி நெற்றிக்கு இட்டுக் கொண்டவர்களே அல்லர் நெற்றிக்கணி யும் தென்கலையார் ஒருவரைத் தவிர யாருமில்லை போலும்!

சுப்ரபாதம்

திரைப்படம் பற்றி ஒரு கண்ணோட்டம்

கீதாசார்யனில் சினிமா விமர்சனமா? திகைப்படைய வேண்டாம். சினிமா என்றாலே அடியோடு வெறுத்து ஒதுக்க வேண்டியதில்லை. நல்லவைகள் எங்கு இருந்தாலும் பாராட்டு வது நமது கடமை. இந்த சிந்தனையில் எழுந்ததுதான் இந்த விமரிசனம்.

புராணப்படங்கள் அல்லது பக்திப்படங்கள் என்றாலே சைவப் படங்கள்தான் என்ற நிலையை மாற்றி முழுக்க முழுக்க வைணவ நெறிகளையும் ஸ்ரீமந் நாராயணனைப் பற்றியும், திவ்ய தேசங்களைப் பற்றியும் ஒரு சிறந்த வண்ணப்படமாகத் தயாரித் தளித்துள்ளனர் P. V. T. புரொடக்ஷன்ஸ்.

பெருமாள் என்பவன் தனது கிராமத்தில் வெய்யிலிலும் மழையிலும் காய்ந்து நனைந்து வாடும் தனது தெய்வமான பெருமானுக்கு ஒரு கோயில் கட்டுவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளையும் அதில் அவனுக்கு ஏற்படும் சோதனைகளையும் விவரிப்பதே சுப்ரபாதத்தின் கதை.

பெருமாள் நேபாளத்திலிருந்து சாளக்ராமம் கொண்டு வருவதறகாக திவ்யதேச யாத்திரை புறப்படுகிறான். படம் முழுவதும் சோளிங்கர், காஞ்சீ, திருக்குடந்தை, ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருவநந்தபுரம், குருவாயூர், திருமாலிருஞ் சோலை, திருமலை, திருவல்லிக்கேணி, புஷ்கரம், காசீ, மதுரா, பண்டரிபுரம், நேபாளம் (காட்மண்டு), ஹரித்வார், ரிஷீகேச், லக்ஷ்மண்ஜூலா, தேவப்ரயாகை (கண்ட மென்னும் கடிநகர்), ஜோஷிமட், பத்ரிநாத் முதலிய பல திவ்யதேசங்களிலும், புண்யஸ்தலங்களிலும் நல்ல முறையில் படமாக்கப்பட்டுள் ளன. குறிப்பாக சோளங்கிபுரத்தில் உத்ஸவர்—ஆண்டாள்

புறப்பாடு, தக்கான் குளம், மலைப்பாதை முதலியவைகளும் புஷ்கரம் கோயிலில் எம்பெருமான்கள். உடையவர் முதலியவர்களும் சிறப்பாகக் காட்சி தருகின்றனர்.

எம்பெருமான் திருவாபரணங்களைத் திருட முயலும் திருடனை குரங்குகள் கடித்துக் குதறும் காட்சியும், பெருமாளின் தம்பி மனைவிக்கு சித்தப்பிரமை நீங்கும் காட்சியும் சோளங்கிபுரத்தின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன.

வசனங்கள் மனதைத் தொடும்படி இருக்கின்றன. குறிப்பாக பெருமாள் தன் தம்பியிடம் அநுதினமும் நெற்றிக்கு இட்டுக் கொள்வதின் அவசியத்தை வலியுறுத்தும் இடத்தைச் சொல்லலாம்.

இனிமையான இசை, அருமையான நடிப்பு, குளுமையான வண்ணப் படப்பிடிப்பு ஆகியவை மனதைக் கவருகின்றன, ஆனால் ஒரு சந்தேகம். சுப்ரபாதம் என்ற படத் தலைப்புக்கும் கதைக்கும் என்ன சம்பந்தம்?

படம் முழுவதும் ஒவ்வொருவரும் நாராயணனது நாமத்தையே வாய்வெருவவது காதுக்கு இனிமையாக இருக்கிறது. படம் வெற்றியடைய வேண்டும் என்று வியாபார ரீதியில் காட்சிகளைச் சேர்க்காமல் முழுமையான ஒரு வைணவ பக்திப் படத்தை எடுத்தளித்துள்ள தயாரிப்பாளரின் துணிச்சலை ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளான். எனவே வைஷ்ணவர்கள் அனைவரும் தவறாமல் குடும்பத்தோடு கண்டு களிக்க வேண்டிய உன்னதமான திரை ஓவியம் இது.

திரைக்கதை எழுதியவருக்கும் டைரக்ட் செய்துள்ள K. சங்கருக்கும், தயாரித்தளித்துள்ள P. V. தௌளசிராமனுக்கும் கீதாசார்யனின் பாராட்டுக்கள். இம்மாதிரி மேலும் பல படங்களைத் தயாரித்தளித்து ஆஸ்திகத்தையும் வைணவத்தையும் பரப்ப கீதாசாரியன் அருள்பாலிக்கட்டும்.

—o—

வைணவக் கோவில்களில் திருவாய்மொழி

பேராசிரியர் Dr. K. V. ராமன்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரந்தாயத்தில் "திவ்யம்" என்ற சொல்லுக்கு தனிச் சிறப்பு உண்டு. ஆழ்வார்கள் திவ்யஸூரிகள் எனப் போற்றப்படுகின்றனர். அவர்கள் பாடிய பாசுரங்கள் திவ்யப்ரபந்தங்கள் என்றும் அப்பாசுரங்களில் பாடப்பெற்றுள்ள திருத்தலங்கள் திவ்யதேசங்கள் என்றும் வழங்கப்படுகின்றன. ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடைய இம்மூன்றுக்கும் அளிக்கப்பட்டுள்ள ஏற்றம் அளவிட முடியாததாகும். ஆழ்வார்களின் பாசுரங்களை நாலாயிர திவ்யப்ரபந்தமாகத் தொகுத்தவர் நாதமுனிகள். அதை இசையில் அமைத்து கோயில்களில் பாடவும் ஏற்பாடு செய்தார். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட கோவில்கள் திவ்ய தேசங்களுக்கென தனி ஏற்றம் பெற்றன. அப்பாடல்களை கேட்டருள திருவுள்ளம் கொண்ட இறைவனின் முன் திவ்யப்ப்ரபந்தங்களை ஸேவிப்பது ஏற்றம் என்ற நிலை ஏற்பட்டது. இதற்காக வைணவர்கள் மூன்று முக்யமான காரியங்களைச் செய்தனர்: (1) திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்த ஆழ்வார்களுக்கு விக்ரஹங்கள் ஏற்படுத்தி கோவில்களில் ப்ரதிஷ்டை செய்து உத்ஸவங்களும் வழிபாடுகளும் நடத்தினர். (2) அவர்கள் பாசுரங்களை அநுதினமும் கோவில்களிலும் உத்ஸவ காலங்களில் வீதிகளில்—இயல் கோஷ்டியாகவும் ஸேவிக்கும் வழிமுறையை ஏற்படுத்தினர். (3) அப்பாசுரங்களுக்கு பிள்ளான், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, மணவாள மாமுனிகள் போன்ற மஹாசாரியர்கள் பல விரிவுரைகள் எழுதினர். அவற்றை பகவத்விஷய காலக்ஷேப கிரந்தங்களாக மக்களிடையே பரவச் செய்தனர்.

ஆழ்வார்களில் பலர் தாழ்ந்த வகுப்பில் பிறந்தவர்களானாலும் அவர்கள் பிறப்பைப் பார்க்காது, அவர்கள் பக்தியையே கருத்தில் கொண்டு இறைவனடியார்களாகவும் நித்யசூரிகளாகவும் வைத்துப் போற்றினர் உயர்குடியில் பிறந்தோரும். தமிழ்ச் சான்றோர்களான ஆழ்வார்களின் தலைமையில் உருவாகிய பக்தி வெள்ளம் தமிழ்நாடெங்கும் பரவி அர்ச்சாவதார வழிபாட்டிற்கும் கோவில்களின் வளர்ச்சிக்கும் வழிகோலின. இப்பக்தி இயக்கத்தை **தமிழ் வைணவ இயக்கம்** என்றே சொல்லலாம். பண்டிதரும் பாமரரும் வேற்றுமையில்லாமல் இவ்வியக்கத்தில் கலந்து கொண்டனர். பண்டிதர்கள் ஆழ்வார் பாசுரங்களை திராவிடவேதம் என்று உகந்து வேதத்திற்குச் சமமாக கொண்டனர். பாமரரும் எளிய தமிழிலுள்ள அழகான பாசுரங்களைப் புரிந்து கொள்ள முடிந்ததால் ஆழ்வார்களின் பக்தியை உணர்ந்து சுவைக்க முடிந்தது. இவ்வாறு சமூகத்தினர் அனைவரும் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

ஆழ்வார்களுள் நம்மாழ்வார் நடுநாயகராகவும் தலைவராகவும் (ப்ரபந்த ஜந கூடஸ்தர்) கருதப்பட்டார். அவரது திருவாய்மொழி திவ்யப்ரபந்தங்களுள் சிகரமாகக் (நாயகமாகக்) கருதப்பட்டது, இவற்றின் துணையில்லாமல் கோயில்களில் விழாக்களே நிறைவு பெறுது என்ற நிலை ஏற்பட்டது. இதைத்தான் கம்பரும் "அந்தமிலா மறையாயிரத்தாழ்ந்த அரும்பொருளைச் செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத்தேவர்களும் தந்தம் விழாவு மழுகும் என்னும்? தமிழார் கவியின் பந்தம் விழாவொழுகும் குருகூர் வந்த பண்ணவனே" என்கிறார் சடகோபரந்தாதியில்.

எனவே ஆழ்வார் பாசுரங்களைக் கோவில்களில் ஸேவிப்பதற்கு நிரந்தரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வியக்கம் நாதமுனிகள் காலத்திலேயே தொடங்கி, பிறகு ராமானுஜர் காலத்திலிருந்து எல்லா கோவில்களுக்கும் பரவி

நிலைத்து நின்றது என்பது கல்வெட்டுக்களால் ஐயமற விளங்கும். அதற்குப் பற்பல கோயில்களிலும் உள்ள பற்பல கல்வெட்டுக்களைச் சான்றாகக் காணலாம்.

வட ஆற்காடு ஜில்லாவில் எண்ணாயிரம் என்றொரு சிற்றூர் உள்ளது. இது ராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்குள்ள ராஜராஜ விண்ணகரம் என்ற கோயிலில் கி. பி. 1023ம் வருடத்திய கல்வெட்டு (MER 1918) ஒன்று காணப்படுகிறது. அரசனின் வெற்றிக்காக அவ்வூர்ச் சபையானது கோயிலுக்கு நன்கொடை அளித்ததாகவும் அதிலிருந்து ஒரு வேத பாடசாலையை நிறுவ வசதி செய்தது எனறும் தெரிகிறது. திருவாய்மொழி பாராயணமும் 'திருவாய்மொழி விண்ணப்பம் செய்யும்' 25 ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் ததீயாராதனம் செய்ய வேண்டும் என்றும் அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இதே போல் உக்கல் என்றவிடத்திலும் உள்ள கல்வெட்டு ஒன்று "திருவாய்மொழித் தேவரை"ப் பற்றியும் அவ்வூர்க் கோயிலில் ‘திருவாய்மொழித் திருப்பதிகம்" அநுசந்திப்பது பற்றியும் குறிப்பிடுகிறது. (இவை முதலாம் ராஜராஜ சோழன் காலத்திய கல்வெட்டுகள்).

தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள திரிபுவனையில் முதலாம் ராஜேந்திர சோழனுடைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டு (176 of 1919) (கி. பி. 1048ம் வருடத்தியது) வீரநாராயண விண்ணகரம் கோயிலில் எழுந்தருளியுள்ள வீரநாராயணப் பெருமாள், அழகியமணவாளர், நரசிம்மர் ஆகியோரின் மாசிப்புனர்வசு, ஸ்ரீஜயந்தி, சித்திரை ஐப்பசி மாதஉத்ஸவங்களில் திருவாய்மொழி விண்ணப்பம் செய்வோருக்குத் ததியா ராதனம் செய்வதற்காக 72 வேலிநிலம் மானியமாக வழங்கப் படுவதாகக் குறிப்பிடுகிறது.

செங்கல்பட்டு உத்தரமேரூரிலும் முதலாம் ராஜேந்திர சோழனின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று (176 and 181 of 1923) அநுதினமும் மூன்று ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவாய்மொழி அநுசந்திப்பதற்காக மாநியங்கள் வழங்கப் பட்டதைக் குறிக்கிறது.

இவை அனைத்தும் ஸ்ரீராமாநுஜர் காலத்திற்கு முற்பட்டவை. அக்காலத்திலேயே திவ்யப்பிரபந்தங்கள் வேதங்களுக்குச் சமமாகப் போற்றப்பட்டு வந்ததை இவற்றிலிருந்து நன்கு அறியலாம்.

ஸ்ரீராமாநுஜர் காலத்தில் இவ்வியக்கம் மேலும் மேலும் வளர்ந்தது. திவ்யப்ரபந்தங்களின் கொள்கைகளையும் தத்துவங்களையும் ஸம்ஸ்க்ருத நூல்களின் மூலம் உலகெங்கும் பரப்பினார். அவற்றின் துணைக்கொண்டே பிரம்மசூத்திரங்களுக்கு உரை எழுதினார் என்று கருதப்படுகின்றது.

இனி ராமாநுஜர் காலத்தில் தொடர்ந்து ஏற்பட்ட வளர்ச்சியையும், அதற்குச் சான்றாகச் சில கல்வெட்டுக்களையும் பார்ப்போம்.

ஸ்ரீரங்கம் : ஸ்ரீவைஷ்ணவ இயக்கத்திற்கு தலைமை ஸ்தானமாக கருதப்படும் இடம் இது. ஆழ்வார்களால் பாடப்பெற்றது. ராமாநுஜர் காலத்திலேயே இக் கோயிலில் எல்லா ஆழ்வார்களுக்கும் விக்ரஹங்கள் ஏற்பட்டிருந்தன. ராமாநுஜர் காலத்தவரான பட்டர் தம்முடைய ஸ்ரீரங்கராஜ ஸ்தலத்தில் எல்லா ஆழ்வார்களும் ஸ்ரீரங்கம் கோயிலில் (விக்ரஹங்களாக) எழுந்தருளியிருப்பதைக் குறிக்கிறார். ஸ்ரீராமாநுஜரின் சமகாலத்தவரான அமுதனார் ராமாநுஜருக்குத் திருவாய்மொழியிலும் நம்மாழ்வார் பேரிலும் இருந்த ஈடுபாட்டைப் ராமாநுச நூற்றந்தாதியில் பல பாசுரங்களில் பாடுகிறார். நம்மாழ்வாருக்கும் திருவாய் மொழிக்கும் ஸ்ரீரங்கத்தில் அளிக்கப்பட்டிருந்த ஏற்றம் இதிலிருந்து தெளிவாகப் புலனாகும். திருப்பள்ளி யெழுச்சியும் திருவாய் மொழியும் விண்ணப்பம் செய்ய மானியங்கள் வழங்கப்பட்டிருந்ததாக கி. பி. 1085ம் வருஷத்திய கல்வெட்டு (61 of 1892) தெரிவிக்கிறது.

காஞ்சீபுரம் : ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு முக்யமான திருத்தலங்களுள் மூன்றுவது இடத்தை வகிக்கும் இவ்வூர் வரதராஜப் பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டு (557 of 1919) ஒன்று இக்கோயிலில் சுமார் 58 ஸ்ரீவைஷ்ணவர்கள் அமர்ந்து திருவாய்மொழி விண்ணப்பம் செய்தார்கள் என்று தெரிவிக்கிறது இக்கல் வெட்டின் காலம் கி பி. 1242. மேலும் கி பி. 1359 வருஷத்திய கல்வெட்டொன்று (572 and 585 of 1919) மூன்றும் பல்லாளன் காஞ்சிக்கு விஜயம் செய்தபோது தனது பட்டமஹிஷிகளுடன் அபிஷேக மண்டபத்தில் வீற்றிருந்து கொண்டு திருவாய் மொழி அநுசந்தானத்தைக் கேட்டு அனுபவித்ததாகக் குறிப்பிடுகிறது.

திருமலை – திருப்பதி : ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இரண்டாவது முக்கியத் தலமான இங்கு நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அக்கல்வெட்டுக்கள் திருவாய்மொழியும் மற்ற திவ்யப்பிரபந்தங்களும் சேவிப்போர்க்கு அரசர்களாலும், மிராசுதார் (பண்ணையார்) களாலும், பக்தர்களாலும் அளிக்கப்பட்ட மானியங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. குறிப்பாக, மதுரகவிகள் நம்மாழ்வார் துதியாகப் பாடியுள்ள கண்ணிநுண் சிறுத்தாம்பு என்கிற பிரபந்தத்தை பெருமாள் முன்பு சேவிப்பது பற்றிக் கீழ்க்கண்ட கல்வெட்டு (200 T.T.) குறிக்கிறது

> சித்திரையில் சித்திரை மதுரகவியின் கண்ணிநுண் சிறுத்தாம்பு ராமாநுஜ நந்தவனத்தில் திருப்பூ மண்டபத்தில் .... எம்பெருமானர் சன்னதியில் நம்மாழ்வார் ஆட்டைத் திருநக்ஷத்ரம் வைகாசி மாஸத்தில் திரு விசாகத்தில் திருவாய்மொழி கேட்டருளி............

மற்ருெரு கல்வெட்டு (146 G.T.) பெருமாள் முன்பு சேவிப்பதைக் குறிப்பிடுகிறது. (கி. பி. 1543)

> அநந்தாம்பிள்ளை ஐயங்கார் பாரத்வாஜ கோத்திரம் —...திருப்பதி ஆசார்ய புருஷர் அத்யயனோத்ஸவத்தில்

> கண்ணினுண் சிறுத்தாம்பு சிறப்பு கொண்டாடும் நாளுக்கு 500 நற்பணம். திருமாமணி மண்டபத்தில் மலை குனிய நின்ற பெருமாளும் நாச்சியாரும் எழுந்தருளி சிறுத்தாம்பு கேட்டருளி அமுது செய்ய......

சிங்கர்பிள்ளை என்பவர் திருவாய்மொழி சிறப்பிற்காக நன்கொடை வழங்கியதாகவும் அதை தம்முடைய ஆசாரியரான அழகிய மணவாளஜீயர் பெயரால் செய்ததாகவும் திருமலையிலுள்ள 15ம் நூற்றாண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு கூறுகிறது.

> "இந்தத் திருவாய் மொழி சிறப்பு தம்முடைய ஆசார்யர் அழகிய மணவாள சீயர்..... கடவதாகவும்..."
>
> (494-T.T.)

திருமலை அடிவாரத்தில் தற்போது கபில தீர்த்தம் என்றழைக்கப்படும் ஆழ்வார் தீர்த்தம் உள்ளது. அங்கு வெகு அழகான நம்மாழ்வார் விக்ரஹம் ஒன்று உள்ளது. அங்குள்ள சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. அதில் நம்மாழ்வார் புகழாக ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு ச்லோகம் பொறிக்கப்பட்டுள்ளது.

> "இங்கு எழுந்தருளியிருக்கும் மாமுனியானவர் திவ்யஜ்ஞானத்தை அடைந்து, தம்முடைய கருணையினால் கலியினால் பீடிக்கப்பட்டிருக்கும் மனிதர்களுக்கு துன்பத்தைப் போக்கு திவ்யஜ்ஞானத்தை அளிக்கிறார்" என்பது சுலோகத்தின் பொருளாகும்.

ஹரி : ‖ திஷ்டத்யஸ்யாஸ்தட பரிஸ(ரே)...காபி தஸ்யா :
மூலே கச்சிந்நிவஸதி முனிம்மம... பதேஷ்டா |
காலத்ருஷ்ட்வா கலிகலுஷி (தம்)...(ச்யா) மபச்யத்
திவ்யஜ்ஞானஸ்ஸகலுதயயா......ப்ரஹ்மவித்யாம் ‖

இவ்வாறு வைணவ அடியார்கள் எங்கெங்கெல்லாம் சென்றனரோ அங்கெல்லாம் ஆழ்வார்கள் பெருமையையும் திவ்யப்பிரபந்தங்களின் பெருமையையும் பரப்பினர். நாலாயிரத்தில் திருவாய் மொழியே உயர்ந்ததாகக் கருதப்பட்டதால் நம்மாழ்வார் ஆழ்வார்களுள் நாயகராகப் போற்றினர்.

வைகாசி	மே	
1	15	வைகாசி மாதப் பிறப்பு.
10	24	காஞ்சி வஸந்தோத்ஸவம் ஆரம்பம்.
14	28	ஸ்ரீ பெரும்பூதூர் உடையவர் சதகலச ஸ்நபனம் (முதல் திருவாதிரை).
16	30	காஞ்சீ வஸந்தோத்ஸவ தீர்த்தவாரி திருவல்லிக்கேணி வஸந்தோத்ஸவம் ஆரம்பம், நம்மாழ்வார் உத்ஸவம் ஆரம்பம்
	ஜுன்	
18	1	சிங்கப்பெருமாள் கோவில் கருடஸேவை.
19	2	ஸ்ரீரங்கம் வஸந்தோத்ஸவம் ஆரம்பம்.
20	3	ஆழ்வார் திருநகரி நவதிருப்பதி கருடஸேவை.
22	5	காஞ்சீ ஆழ்வார் திருநாள்.
24	7	திருக்கண்ணபுரம் கருடஸேவை திருவள்ளூர் தெப்பம்.
25	8	காஞ்சீ தேவப் பெருமாள் கருடஸேவை நம்மாழ்வார் சாற்றுமுறை.
27	10	ஸ்ரீரங்கம் ஏகவஸந்தம் சாற்றுமுறை
29	12	காஞ்சீ திருத்தேர்.
31	14	காஞ்சீ தீர்த்தவாரி.

ஆஸ்திகரே !

'வைணவ சம்ப்ரதாயத்தை வளர்க்க வேண்டும் ; அதற்கு நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும்' என்ற ஒரே நோக்கத்தோடு நமது பத்ரிகை ஆரம்பிக்கப்பட்டு, வாசகர்களுக்குக் குறைந்த விலையில் ஒரு தரமான பத்ரிகையை இது வரை அளித்து வந்துள்ளோம். இந்த ஒரு முயற்சிக்கு இப்போது ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

சமீபத்திய பட்ஜெட்டின் விளைவினால், நமது பத்ரிகைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களின் விலைகளும் கூடியுள்ளன என்பது வாசகர்கள் அறிந்ததே. கீதாசார்யன் ஆரம்பிக்கும் போது ஒரு ரீம் பேப்பரின் விலை ரூ. 60/- ஆக இருந்தது, இப்போது ரூ 90/- ஆக உயர்ந்துள்ளது. மேலும் அச்சுக் கூலி முதல் 'ப்ளாக்' தயாரிப்புவரை ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் 10 சதவீதமாவது விலை கூடியுள்ளது. இப்படிபட்ட நிலைமையில், இந்த பத்ரிகை தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்றால், ஒன்று பத்ரிகையின் தரத்தைக் குறைக்க வேண்டும் அல்லது பத்ரிகையின் தரத்தைக் குறைக்காமல் பத்ரிகையின் விலையைக் கூட்ட வேண்டும்.

இன்றைய நிலையில், இப்பொழுதுள்ள தரத்தில் ஒரு பத்ரிகையை வெளிக் கொண்டு வருவதற்கு ரூ 1.10 ஆகிறது. ஆனால் உங்களிடமிருந்து நாங்கள் பெறுவாதா ரூ 0.65 தான். அதை விளம்பரங்கள் மூலம் சமாளிக்க நாங்கள் நினைத்திருந்தாலும், ஒரு மதப் பத்ரிகைக்கு, அதிலும் ஒரு குறிப்பிட்ட கவாசாரப் பத்ரிகைக்கு விளம்பரங்கள் கிடைப்பதும் அரிதாக உள்ளது.

பத்ரிகையின் தரத்தை எந்நாளும் குறைக்க நாம் விரும்பவில்லை. அதே சமயம் வாசகர்களையும் அதிகமாக கஷ்டப்படுத்தவும் மனம் இசையவில்லை. ஆகவே வாசகர்களையும் அதிகம் கஷ்டப் படுத்தாமல் அதே சமயம் நிதி நிலைமையை சமாளிக்கும் பொருட்டும், இனி மேல் நமது பத்ரிகையின் ஆண்டுச் சந்தாவை ரூ. 10/- ஆகவும், ஒருதனி ப்ரதியின் விலையை ரூ. 1/- ஆகவும் உயர்த்த யோசனை செய்து வருகிறோம். வாசகர்களாகிய உங்கள் எண்ணங்களை இது பொருட்டு எங்களுக்குத் தெரிவித்து, உங்களது ஆதரவைத் தரக் கோருகிறோம்.

P. T. சுந்தரவரதன்
நிதிக் காப்பளார்.

Wrapper Paper donated by Sri A. V. Kannia Naidu

Regd. No. 345: T. N. M. S. (c)

Wrapper Printed at ENENJAY Printers, Triplicane.